பர்மா-மலாய் 0-1-3 இலங்கை-6 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

(வாரப் பதிப்பு)

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4 ஓசை 9 | சென்னை—வெகுதானிய ஞு மார்கழி மீ 24வ ஞாயிற்றுக்கிழமை (8—1—39) | விலை அரையணு

முதன் மந்திரி சுக்லா



மத்திய மாகாண முதன் மந்திரியாக இருந்தவர் டாக்டர். கரே. அவருடைய தான்-தோன்றித்தனத்தால் முதன் மந்திரி பதவியிலிருந்தே அவர் வெளியேற வேண்டியதாயிற்று. அவருக்குப்பின் முதன் மந்திரியாக வந்திருக்கும் பண்டித ரவிசங்கர சுக்லா. இவர் வயோதிகர்; அனுபவ மிகுந்த நல்ல தியாகி; காங்கிரஸ் மீது அழியாத அன்பு கொண்டவர். மத்திய மாகாணத்திலுள்ள திரிபுராவில் நடைபெறப்போகும் 52 வது தேசிய காங்கிரஸ் மகாநாட்டைச் சிறப்பாக நடத்திவைக்க தீவிரமாக உழைத்து வருகிறார்.

அழகிய கூந்தல் அதிகமாக வளரச் செய்வது

குல்பஹார் கூந்தல் தைலம்

உங்கள் ரோமத்தை எப்பொழுதும் வளம் பொருந்தியதாக வைத்துக்கொள்ளவும்

உங்கள் புத்தியைக் கூர்மையாக வைத்துக் கொள்ளவும்,

உங்கள் கண்களைக் குளிர்ச்சி, பொருந்தியதாக வைத்துக்கொள்ளவும்

குல்பஹார் கூந்தல் தைலத்தையே உபயோகியுங்கள்.

கணக்கற்றவர்கள் அந்தத் தைலத்தை உபயோகித்து பயனடைந்திருக்கிறார்கள்

ஒரு புட்டி விலை அணா 14. தபால் செலவு வேறு.

3 புட்டி ரூ. 2-8-0. பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் தபால் சிலவு இனாம்.

மொத்த வியாபாரிகளுக்குப் பிரத்தியேகமான விலையில் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு நகரிலும் ஏஜண்டுகள் தேவை.

முக்கால் அணா ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பில் இனாமாக அனுப்பப்படும்.

தாஜ்முல் ஹுசேய்ன்,

வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்வோர், மௌண்ட் ரோட், மதராஸ்.

டிரேட்மார்க்குகள் பெயர்கள் லேபில்களை

சுல்கத்தா ரிஜிஸ்டர்

AGENTS ஜி.ஏ.ஓர்க்ஸ

செய்யது பந்தர் தெருவு மதராஸ்

மதராஸ் டி. சி. என்

கோல்டன் மேடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களை விட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2வருஷ உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை	ரூ. 3 0 0
மத்திய சைஸ் 1¾" முதல் 2"க்குள் ஜதை	ரூ. 2 8 0
குழந்தை சைஸ் 1¾-க்கு உட்பட்டது ஜதை	ரூ. 2 0 0
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை	அணா 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இஞ்சியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,

280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் மதராஸ்.

குறிப்பு:-" தமிழ் மணி " பெயரைக்குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனாம்.

குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணா 12. மலேய நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

—: ஏஜண்டுகள் தேவை :—

எம். ஜி. ராஜன்ஸ்

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் ஒருங்கே அமைந்தது

எம். ஜி. ராஜன் அண்டு கம்பேனி, P.B 231 G P O.MADRAS(T)

ஜெர்மன் ரிப்பீடிங் அலாரம் பிஸ்டல்



இது நூதன முறையில், உயர்தர எஃகுத் தகட்டினால் தயாரித்தது. உள்ளே பலத்த ஸ்பிரிங், ஆக்ஷனுடன் அமைக்கப்பட்டது. ஏககாலத்தில் எட்டு அல்லது பத்து வெடிகள் உடனுக்கு உடனே, கனத்த சப்தத்துடனும், நெருப்புடனும், புகையுடனும் கிளம்பி, எதிரிகளை பிரமிக்கச் செய்யும். இது உண்மையில், ஒரு பெரிய கைத் துப்பாக்கிக்கு ஒப்பானது.

50 கேப்புகளுடன் கூடிய பிஸ்டல் விலை ரூ. 3-0-0

தபால் செலவு பிரத்தியேகம். தனியே கேப்புகள் 50-க்கு ரூ. 1.

எமது விலாசம்: பக்தா அண்டு கம்பேனி,

1-24, ஆயலூர் முத்தையா முதலி தெரு, சென்னை.

தேவை

ஏஜண்டுகள் தேவை :-:

சர்ச்லைட் கட்டிங் டைமன்ஸ்

இயற்கை வைர சிறப்பு இதுவே என போற்றப்பெற்றது. உலகத்தில் அநேக பெயர் பெற்ற வைரங்கள் இருக்கின்றன. ஆனாலும், எமது வைரங்கள் உயர்வை எதுவும் அடைந்ததில்லை ஏனெனில் உழைப்பு, உறுதி, கடினம், பூரிப்பு எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றது. சீமைக் சமஸ்ச் சிறப்பை சிக்கன முறையில் அடைந்தது திருப்திஅடையும்படி ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி நிபுணரால் கண்டு பிடிக்கப்பட்ட

சர்ச்லைட் வைரங்கள்

... சைஸ் கமலம் 1-க்கு	0—8—0	குறைந்த கிரையத்திற்கு விற்று வருகின்றோம்
... கன் வசைஸ் கமலம் 1-க்கு	0—7—0	
பேஸர் சைன் கமலம் 1-க்கு	0—6—0	

குறிப்பு:-சர்ச்லைட் வைரங்கள் எங்களிடமும் எங்கள் உரிமை பெற்ற ஏஜண்டுகளிடமும்தான் கிடைக்கும்.

வெளியூர் ஆடர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும்.

ஒரு முறை ஆடர் செய்து உண்மையுணரக் கோருகின்றோம்.

எங்கள் ஏஜண்டுகள்:— 1 A. துரைசாமி நாய்க்கர், பெரிய காஞ்சீபுரம். 2 T. P. N ராஜன் & கோ, மதுரை. 3 G. நாராயணசாமி நாயுடு, தஞ்சாவூர். 4 M. M. அப்துல் காதர் பருத்தித்துறை (சிலோன்)

விலாசம்:— சம்சுதீன் அண்டு இஸ்மாயில், 94-96, மின்ட் ஸ்ட்ரீட், சௌக்கார்பேட்டை, மதராஸ்.

சொக்கநாதன்

தொடர் கதை

மாயக் குறத்தி!

தஞ்சை இளவரசி மோகனவை, மதுரை இளவரசர் சொக்கநாதனுக்கு மணஞ்செய்து வைக்கும்படி, தஞ்சை அரசரைக் கேட்க தஞ்சைக்கு மாறு வேடமணிந்து வந்த தூதக் கோஷ்டியினர், தஞ்சையில் என்ன செய்து கொண்டிருந்தார்களென்பதைக் கவனிப்போம்.

வீரசிங்கனும், அவருடன் சென்ற மதுரை வீரர்களும் மாறு வேடமணிந்து, தஞ்சைக்கு தெற்கேயுள்ள சத்திரத்தில் தங்கியிருந்தார்கள். அவர்களைக் கண்டவர்கள் எவரும் அவர்கள் மதுரை வீரர்களென்று சந்தேகிக்கவே இல்லை நாட்டுப்புற வாசிகளைப் போல் நடந்து கொண்டார்கள். ரகசியமாக தஞ்சையின் பல பாகங்களுக்குச் சென்று உளவு அறிந்து வந்தனர்

தஞ்சையிலுள்ள துப்பறிவோர் மதுரை வீரர்களுக்கு இளைத்தவர்களா? அவர்களும் தஞ்சைக்கு ஆபத்து வராமல் தடுப்பதற்காக இரவு பகலாக உளவு பார்த்து வந்தார்கள்; தஞ்சைக்கே சனியனை வந்துதித்த, சதியின் அவதாரமாகிய அங்கப்பன், இரவு பகலாகத் தூக்கமின்றி, துப்பறிபவர்களைத் தூண்டி விட்டு, மும்முரமாக வேலை செய்து வந்தான். ரங்கன் தஞ்சைக்கு வந்து மாயமாக மறைந்து விட்டான் என்று ரஞ்சிதம் கூறிய நாள் முதல், அங்கப்பனுக்குத் தூக்கம் கிடையாது அவனுக்கு ஆபத்து நிச்சயம் என்பதை அறிந்தான். ரங்கனைத் தொலைத்தாலொழிய, அங்கப்பன் சதிகள் ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை. தஞ்சை இளவரசி மோகனவை மணந்து, தஞ்சைக்கே அரசனாகப் போவதாக அவன் கொண்டிருந்த எண்ணத்தில் மண் விழுவது நிச்சயமென்பதை உணர்ந்தான். அவன் கண்ட கனவுயெல்லாம் வெறும் பகற் கனவாகவே வந்து முடியுமோவென ஏங்கினான். தஞ்சை அவன் கையிலிருந்து பறந்தோடி விடுமோவெனப் பயந்தான். இந்தப் பீதியோடு அங்கப்பன், அவனுடைய அரண்மனையிலிருந்து யோசித்துக் கொண்டிருந்த போது, அந்த அரண்மனைக்கு முன் ஒரு குறத்தி வந்து நின்றாள் குறத்தி நல்ல வாலிபம். வீட்டின் முன் நின்று கொண்டு அங்குமிங்கும் பார்த்தாள் இந்நேரத்தில் அங்கப்பன் அவன் அறையினுள் அடைபட்ட புலி போல் உலாவிக் கொண்டிருந்தான் வீட்டிற்கு வெளியில் ஒரு குறத்தி நின்று கொண்டு அங்குமிங்கும் பார்ப்பதைக் கண்டு சந்தேகித்தான் அவனுக்குப் பல சந்தேகங்கள் தோன்றின. ஜன்னல் வழியாக அந்தக் குறத்தியை உற்றுக் கவனித்தான். சிறிதுநேரத்தில் அக் குறத்தி அவன் அரண்மனையில் நுழைவதைக் கண்டதும், அறையிலிருந்து வேகமாக வெளியில் வந்தான்.

"நீ யார்? எங்கே வந்தாய்?" என்று அதட்டிக் கேட்டுக் கொண்டே, அவளை வீட்டினுள் வரவிடாமல் தடுத்தான். அவன் பரபரப்பைக் கண்டு குறத்தி நகைத்தாள். அவன் தடுப்பதையும் பொருட்படுத்தாமல் ஒரு பைத்தியக்காரி போல் ஆடிக்கொண்டே அரண்மனையினுள் நுழைந்தாள். அங்கப்பன் ஒன்றுமறியாமல் விழித்தான் உயிருக்கு ஆபத்து வருமோவென்று அஞ்சி வேலைக்காரர்களை அழைத்தான். உடனே குறத்தி அங்கப்பனைத் தாவிப் பிடித்தாள். கரங்களால் அவன் வாயை இறுக மூடினாள். அங்கப்பன் திமிறிக் கொண்டு குறத்தி பிடியினின்றுத் தப்ப முயன்றான்; முடியவில்லை அதற்குள் குறத்தி கையிலிருந்த ஒரு துணியை, அங்கப்பன் மூக்கில் வைத்தாள். அங்கப்பன் மயங்கிக் கீழே சாய்ந்தான். அவனை அந்தக் குறத்தி கடகடவென்று அவன் அறைக்கு இழுத்துச் சென்றாள். உள்ளே சென்றதும் கதவை மூடித் தாளிட்டாள். அங்கப்பன் சவம் போல் தரையில் கிடந்தான்.

காலஞ்சென்ற மந்திரி ராமன் மேனன். இவருடைய மரணம், சென்னை மந்திரி சபைக்கு மட்டுமல்ல, தேசத்துக்கே ஒரு பெரும் நஷ்டமாகும். இவர் இளைஞர்; வயது 42 தான். இந்த இளம் வயதில் தேசத்துக்காக, உடல் பொருள், ஆவி யாவற்றையும் ஒருங்கே தத்தஞ் செய்துவிட்டு, இந்தப் பூவுலகிலிருந்து மாயமாக மறைந்து விட்டார்.

குறத்தி சிறிது நேரம் அறையினுள் உட்கார்ந்திருந்தாள். அறையை நன்றாகக் கவனித்தாள். பிறர் வெளியிலிருந்து பார்க்காதபடி ஜன்னல்களையும், கதவுகளையும் மூடினாள். அங்கப்பன் போட்ட கூச்சலால் வேலைக்காரர்கள் வருகிறார்களோவென்று உற்றுக் கவனித்தாள். அவள் எண்ணியபடி வேலையாட்கள் எவரும் வரவில்லை. குறத்தி, அங்கப்பன் அருகில் வந்தாள். இந்நேரத்தில் அங்கப்பன் மூர்ச்சை தெளிந்து எதிரே நின்றுகொண்டிருக்கும் குறத்தியைக் கண்டான் "நீ யார்?" என்று கேட்டுக் கொண்டே குறத்தியைத் தாவிப் பிடித்தான். குறத்தி அவனுக்குப் பயப்படவில்லை; கலகலவெனச் சிரித்தாள். அவள் சிரிப்பு அங்கப்பனைத் திகைக்கச் செய்தது. அவன் ஒன்றும் அறியாமல் மேலும் கீழுமாக ஆந்தை போல் விழித்தான். இந்நேரத்தில் குறத்தி அவன் தலையில் கட்டியிருந்த சிறு துணியை அவிழ்த்தாள். மாறு வேடத்தைக் கலைந்தாள்; அங்கப்பன் திடுக்கிட்டுப் போனான்.

"ரஞ்சிதம்! நீயா? அடி மாயக்காரி! ஏன் இந்தக் குறத்தி கோலம்?"

"ஆமாம்; நான் ரஞ்சிதந்தான்; சந்தேகம் வேண்டாம். இந்தக் கோலம் எடுத்திருக்காவிட்டால் உன்னைச் சந்தித்திருக்கவே முடியாது."

"என்னையா? அப்படி என்ன ஆபத்து உன்னையும், என்னையும் சூழ்ந்திருக்கிறது?"

"பெரிய ஆபத்து! அந்த ஆபத்தைப்பற்றிக் கூறவே இங்கு அவசரமாக வந்தேன்."

"வந்தவள் உடனே அதைப்பற்றிக் கூறக் கூடாதா? என்னை மயக்கி இந்தக் கோலமா செய்யவேண்டும்?"

"ஆம்; இன்றேல், இருவருக்கும் ஆபத்து...உங்களுக்கு ஒன்றும் தெரியாது...நீங்கள் வெறும் கனவு ஆசாமிதான்!...உங்களைச் சுற்றி என்ன நடக்கிறதென்று அறிய உங்களுக்கு சாமர்த்தியம் போதாது."

"அப்படியா? அவ்வளவு ஆபத்துக்குள்ளாகியா இருக்கிறோம்...?"

"ஆம்...மதுரையிலிருந்து பல சதிகாரர்கள் தஞ்சைக்கு வந்திருக்கிறார்களென அறிகிறேன். நாம் விழிப்பாக இல்லாவிட்டால், நம் வாயில் மண்ணைப் போட்டு விடுவார்கள்!"

"அப்படியா? எப்போ? யார் யார் வந்திருக்கிறார்கள்?...அந்த ரங்கன்..."

"ரங்கன் வந்திருக்கிறானோ என்னமோ தெரியாது. ஆனால், பலர் வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்து சில தினங்களாகின்றன."

"சில தினங்களா? எங்கே இருக்கிறார்கள்?"

"தஞ்சைக்கு தென் கோடியிலுள்ள சத்திரத்தில் தங்கியிருக்கிறார்களென்று தெரிகிறது."

"தெற்கே உள்ள சத்திரத்திலா?"

"ஆம்"

"எதற்காக வந்திருக்கிறார்கள்?"

"அதுதான் பரம ரகசியம்!...அந்த ரகசியத்தை அறிய முயன்றேன். ஆனால், முடியாது போயிற்று."

"எப்படி?"

"இளவரசி, கமலம், பாட்டி முதலியோர் பேசிக்கொண்டிருந்தார்கள். சில வார்த்தைகள் என் காதில் பட்டன. அதற்குள்ளாக அந்த விஷப் பாம்புக் குட்டி கமலம் வந்து விட்டாள்..."

"அவர்களுக்கு எப்படித் தெரியும்? அவர்களும் இந்த சதியில் சேர்ந்திருக்கிறார்களோ?"

(அடுத்த பக்கம் பார்க்க)

போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது

V. ARUMUGA CHETTY

விநாயகர் மார்க்கு சுருட்டுகள்

வை. ஆறுமுக செட்டியார், நெ. 13, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

மாயக் குறத்தி!

(முன் பக்கத் தொடர்ச்சி)

"சோமலா அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது....விசேஷமாக அந்த விஷயம் கமலத்துக்கு எல்லாந் தெரியுமென்று நினைக்கிறேன்..."

"அப்படியானல் அவளைத் தொலைத்துவிட வேண்டும்..."

"஛ீ! அது கூடாது; இப்பொழுது அவளைத் தொலைப்பது ஆபத்து! அவர்களை அப்படியே விட்டுவைக்க வேண்டும்..."

"அப்படியானல், உன் யோசனை தான் என்ன?

"அதற்கு யோசனை கேட்கவே உங்களிடம் வந்தேன்...உங்களை எச்சரிக்கை செய்ய அவசரமாக ஓடி வந்தேன்..."

"நல்ல காரியஞ் செய்தாய்...ரஞ்சிதம்; உன் உதவி பெரிய உதவி... அது இருக்கட்டும், அந்த மதுரை எதிகாரர்களை அப்படியே கூண்டோடு பிடித்துவிட வேண்டும்; அதுதான் சரி...உன் யோசனை எப்படி?"

"ஆம்; அவர்களைப் பிடிக்கவேண்டியதுதான்......ஆனல், எப்படியென்றுதான் யோசிக்கிறேன்"

"அதைப்பற்றி உனக்கு கவலை வேண்டாம் தஞ்சையிலுள்ள சிறந்த ஒற்றர்களை பெல்லாம் அனுப்பி, அவர்களை அப்படியே பிடித்து விடுகிறேன்..."

"எப்போ?"

"இன்றிரவே!"

"மதுரையிலிருந்து இவ்வளவு தைரியமாக தஞ்சைக்கு வரக்கூடிய ஒற்றர்கள் லேசான பேர்வழிகளாக இருக்க மாட்டார்கள்..."

"யாரா இருந்தாலென்ன? எமனே வரட்டுமே! அவனைக்கூட அப்படியே அசைய விடாமல் செய்து விடுவேன்! அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்..."

"சரி...உங்கள் யோசனைபோல் செய்யுங்கள்...ஆனல், முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்"

"ரஞ்சிதம் நீ கவலைப்படாதே! அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்..."

"சரி; நான் போய்வருகிறேன்... மீண்டும் எப்பொழுது சந்திக்க வேண்டும்?..."

"எப்பொழுது அவசரமோ உடனே வா. என் அரண்மனை உனக்குச் சொந்தம்; நீயே இந்த அரண்மனையின் அரசி! ரஞ்சிதம் நீ யெனக்குப் பேருபகாரம் புரிந்தாய்..."

"எல்லாம் நமது நன்மைக்குத்தான்..."

"ஆமாம்...நமது நன்மைக்கே; எனக்கு ஒரு வார்த்தையில்லையா? கண்ணே! ரஞ்சிதம்...உம்...நீ..."

"என்ன வார்த்தை......நான் சொல்லவிருக்கு?...நீங்கள்... மனம் வைத்தால்...நான் இவ்வாறு..."

"ஆமாம்...செல்வமே...பொறு.. நமது காலம் நெருங்கி வருகிறது." எனக் கூறிக்கொண்டே அவள் கரங்களைப் பற்றினன்; ரஞ்சிதம் இதை எதிர் பார்க்கவில்லை. அங்கப்பன் சட்டென அவளை மார்போடு தழுவி முத்தமிட்டான்.

அங்கப்பன் திடீரென இவ்வாறு நடந்துகொண்டது ரஞ்சிதத்தைப் பிரமிக்கும்படி செய்தது; அவள் இதை எதிர்பார்க்கவே இல்லை. என்றாலும், அவள் அங்கப்பனை உண்மையில் காதலித்தாள். ஆனல் அங்கப்பனே அவளைக் காதலிக்கவில்லை. அவளை அவனது ஆசை நாயகியென்றே எண்ணியிருந்தான் அவன் தன்னை உண்மையாகக் காதலிக்கிறனென எண்ணி ஏமாந்த ரஞ்சிதம், அங்கப்பன் செயலை வெறுக்கவில்லை. ஒரு விநாடி அவன் தோள்மீது சாய்ந்தபடியே நின்றாள் அவள் அவசரமாக அரண்மனைக்குப் போகவேண்டியிருந்ததால் சட்டெனப் பிரிந்துசென்றாள். மீண்டும் குறத்தி வேஷத்தை வெகு சாதுர்யமாகப் போட்டுக்கொண்டு, அங்கப்பன் அறையிலிருந்து வெளியேறினள். அவள் வீட்டின் வாசற்படியண்டை வந்ததும், அவளுக்கு முன்னல், சற்றுத் தூரத்தில் ஒரு குஷ்டரோகி நொண்டி நொண்டி நடந்துபோவதைக் கண்டாள். அவளுக்கு சிறிது சந்தேகம் தோன்றியது. அந்தக் குஷ்டரோகியைக் கூர்ந்து கவனித்தாள். ஆனல், அவன் அடுத்தவீட்டில் பிச்சை கேட்டுக்கொண்டே மனம் சோர்ந்து கீழே உட்காருவதைக் கண்டு சந்தேகம் தெளிந்து அங்கிருந்து புறப்பட்டாள். ஒரு சாதாரணக் குறத்திபோல சாவதானமாக பல சந்துபொந்துகளில் புகுந்து மறைந்தாள்.

(தொடரும்)

விலை ரூபா 1-0-0

மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

அழகான காலண்டர்கள்.

அழகும், நல்ல அமைப்பும் பொருந்திய

கத்தோலிக்க காலண்டர்கள்

13 பக்கங்கள் அழகான பல வர்ணப் படங்கள் நிறைந்தவை.

கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களுக்கு அவசியமான விஷயங்களும், வருடம் முழுவதும் வரக்கூடிய திருநாட்கள் குறிப்பிட்டுள்ளதுமான காலண்டர்கள் ஒவ்வொரு கிறிஸ்துவக் குடும்பத்துக்கும், கிறிஸ்துவக் கல்லூரிகளுக்கும் அழகு செய்யக்கூடியவை; ஏன்? ஒவ்வொரு கிறிஸ்துவக் குடும்பத்துக்கும் அத்தியாவசியமானவை என்று சொல்லலாம்.

வருடம் முழுவதுக்கும் உபயோகப்படக்கூடிய ஒரு சிறந்த சன்மானம்

காலண்டர் 1-க்கு விலை ரூ. 1.

ஒரு டஜன் காலண்டர் விலை 10-8.

குறிப்பு:—எமது கடையையும், காரியாலயத்தையும் லோன்ஸ்கொயருக்கு எதிரிலுள்ள 165ம் நம்பர் கட்டிடத்துக்கு மாற்றியிருக்கிறோம்.

தாமஸ் ரொட்ரிகோ அண்டு சன்ஸ்,

165, பிராட்வே, மதராஸ்.

ஆப்ரேஷன் தேவையில்லை

தொண்டையிலும், நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்தால்

"டான்ஸிலிட்"

அற்புதமாய்க் குணப்படுத்தும்

இந்த அருமையான மருந்து பயோலாஜிகள் முறைப்படி கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் பெருமையை அதிகமாக விவரித்து எழுதுவதை நிறுத்திச் சுருக்கிக் காட்டுகிறோம். தற்காலத்தில் தொண்டையில் உள்நாக்கின் இருபக்கங்களிலும், நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் சகஜமாயிருக்கின்றது இந்த வியாதியை "டான்ஸிலிட்" அபூர்வமாகக் குணப்படுத்தும். நிற்க இந்த பரம ஔஷதம் சாப்பிட ஆரம்பித்தவுடன் ஜலதோஷம், இருமல், அடிக்கடி உண்டாகும் காச்சல் முதலியவைகளையும் போக்கி அபரிமிதமான பசி தீபவத்தை பெருக்கி, தேகத்தைப் புஷ்டியாக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தராக முதலில் ஒரு பாட்டல் வாங்கியுண்டால் இவற்றின் அபார குணம் நன்கு விளங்கும். இல்லையேல் எமக்கு தெரிவித்தால் விபரங்களும நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்ப சித்தமாயிருக்கிறோம்.

விவரங்களுக்கு:— ஆலன்கிளினிக், இராயப்பேட்டை, மதராஸ்.

கீழ்கண் இடங்களிலும் கிடைக்கும்

ஸ்பென்சர் அண்டு கோ சென்னை.
அப்பா அண்டு கோ, சென்னை.
தாதா அண்டு கோ, சென்னை.
வில்பிரட் பெரைரா, சென்னை,
சாமி அண்டு கோ அலிப்பி.
வி. எல். நாதன் அண்டு கோ, பெங்களூர்.
அலயன்ஸ் பார்மஸி, ரங்கூன்.
டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை, மதுரை.
பி. எம். ஜேவரி அண்டு கோ, பிரின்ஸஸ் தெருவு, பம்பாய்.
கும்பகோணம் டிரக் ஸ்டோர்ஸ் கும்பகோணம்.
நயினுமுகமத் அண்டு சன்ஸ் சிங்கப்பூர்.

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த

வி. என். ஷண்முகம் பட்டணம் பொடியை எப்பொழுதும் உபயோகியுங்கள்

நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ்.

(ஏஜண்டுகள் தேவை)

கதறும் ஐரோப்பா!



மிருகபலத்தில் நம்பிக்கைகொண்டுள்ள மேனாடுகளில் யுத்தப்பேய் தாண்டவமாடுகிறது வெடிகுண்டு, பீரங்கி, விஷப்புகை முதலிய கொடிய ஆயுதங்களை உபயோகித்து மக்களை மிருகங்களைப்போல் கொன்று குவித்து வருகின்றனர்

விஷப்புகையை தடுக்க ஐரோப்பியர் விஷப்புகை முகமூடிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த முகமூடி அணிந்திருக்கும் மனிதர் ஒரு குரங்கை ஒத்திருப்பதைப் படத்தில் காணலாம். இது தான் மேனாட்டு நாகரிகம்.

பாழும் நாகரிகம் குரங்குப் பிடி!

ஐரோப்பிய நாகரிகத்தைச் சிறந்த நாகரிகமாக இந்தியரில் பெரும்பான்மையோர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பலர் இந்த நாகரிகத்தைக் குரங்குபோல் பின்பற்றுகின்றனர். வேறு சிலர் இந்த நாகரிகத்தைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். மேனாட்டு மோகம் கொண்ட இவர்கள், மேனாட்டினரையும் தோற்கடித்து விடுவார்கள்போலும்! ஆனால், ஐரோப்பியர் அவர்கள் நாகரிகத்தையே வெறுக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிருக பலத்திலிருந்த நம்பிக்கை குறைந்து வருகிறது. காந்திஜியின் அஹிம்சா தர்ம வழிக்குப் பலர் திரும்பி வருகின்றனர்.

ஐரோப்பிய நாகரிகம் என்றால் என்ன? மொத்தத்தில் அதை அநாகரிகமென்று கூறிவிடலாம். டாம்பீகம், பணப்பேய், ஒழுக்கமின்மை, உயர்வு, தாழ்வு, அறிவீனம் எல்லாம் அந்த ஐரோப்பிய நாகரிகத்தினின்று பிறந்தவை என்பதில் சந்தேகமில்லை. ஆங்கிலம் படித்துப் பெரிய பெரிய பட்டங்கள் பெற்று, கால்சட்டை, தொப்பி போட்டுக்கொள்வதால் ஒருவன் நாகரிகமடைந்தவனாகி விடமாட்டான். எவனிடம், சத்தியம், அஹிம்சை எளிய வாழ்க்கை ஆழ்ந்த சிந்தனை இல்லையோ அவன் அறிவீனனே. இவ்வித அநாகரிகத்தை மேனாட்டினரிடம் காணலாம். பணப்பேய்,நாடு பிடிக்கும் ஆசை, உலகில் கேள்விப்பட்டிருக்காத அநாகரிகச் செயல்களெல்லாம் மேனாட்டிலிருந்தே கீழ் நாடுகளுக்கு இறக்குமதியாயின. இதையே, சில கீழ் தேசங்கள் நாகரிகமாகக் கொண்டாடுகின்றன. பலர் இந்த நாகரிகத்தையே பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறார்கள் மேனாட்டு நாகரிகங்கள் எல்லாம் கெடுதியுள்ளவை யென்று கூறிவிட முடியாது. அவற்றில் ஒரு சில நன்மையான அம்சங்கள் உண்டு. ஆனால், அந்த நன்மைகளைக் கடைப்பிடிப்பவர் ஒரு சிலரேயாவர் பெரும்பாலும் மக்கள் கேடுகளையே முதலில் தேடிக்கொள்ளுவர்.

நாகரிக போராட்டு

மேனாட்டினர் அவர்கள் நாகரிகத்தையே பிரமாதமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனால், அவர்கள் நாகரிகத்தை அவர்களில் பலர் வெறுக்கத் தலைப்பட்டு விட்டனர். கீழ்த்தேச நாகரிகத்தையும், கலைகளையும் ஆராய ஆரம்பித்திருக்கிறார்கள் அதிலும், காந்திஜி அரசியலில் நுழைந்தபின், அவருடைய அஹிம்சா கொள்கைக்கும் சத்தியத்துக்கும் மேனாடுகளில் வரவர அதிக மதிப்பு ஏற்பட்டுவருகிறது. காந்திஜியின் கொள்கை உலகத்துக்குப் புதிது அல்ல; பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே பல பெரியார்கள் இந்த உன்னத தர்மத்தைப் போதித்து வந்திருக்கின்றனர். ஆனால், மண்ணாசை, பொன்னாசை பிடித்த ஐரோப்பியர் அந்த மகான்களின் போதனைகளைக் காற்றோடு விட்டுவிட்டனர். சோக்ரதர் கிறிஸ்துபிரான் முதலியவர்கள் போதித்த அஹிம்சை, சத்தியம் முதலிய உயர்ந்த கொள்கைகளெல்லாம் இன்று இருக்கிற இடம் தெரியவில்லை கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளும் ஐரோப்பியரே கிறிஸ்துபிரானின் உத்தமமான போதனைகளை மறந்துவிட்டனர் அஹிம்சை ஒழிந்து, அவர்களிடம் ஹிம்சையான மறத்தன்மை புகுந்திருக்கிறது. அந்த மறத்தன்மையும், மிருகபலமுமே இன்று ஐரோப்பாவை ஒரு வனமாக மாற்றியிருக்கிறது. ஐரோப்பாவில் இன்று மிருகத்தனத்தையே பெரும்பாலும் காணலாம். யுத்தம்-மக்களை மிருகங்களைப்போல் வேட்டையாடிக் கொன்று குவிக்கும் யுத்தங்களுக்கு எல்லாத் தேசங்களும் தயாராக வருகின்றன. இதன் முடிவு என்னவாகும்? ஐரோப்பா சீரழிந்து, அடியோடு குட்டிச்சுவராக வேண்டியதுதான். இந்த ஆபத்தான, அநாகரிகமான, மோசமான நிலைமையைத் தடுக்கவே பல ஐரோப்பிய பெரியார்கள் முன்வந்திருக்கின்றனர். ஐரோப்பியர் நாகரிகத்தையும், ஐரோப்பியர் மிருகத்தனத்தையும் அவர்கள் கண்டித்து வருகின்றனர் ஒரு தேசத்தை மற்றொரு தேசம் அடக்கி ஆண்டு வருவதையும், பிற தேசங்களைப் பலாத்காரமாகப் பிடிப்பதையும் அவர்கள் வெறுக்கின்றனர். வெறும் மண்ணுக்காக, கிடைப்பதற்கரிய உயிர்களை சித்திரவதை செய்து கொல்லுவது மடத்தன்மையேயாகும்.



உலகிற்கு அஹிம்ஸா தர்மத்தையும், சத்தியநெறியையும் போதித்து வரும் மகாத்மா காந்தி.

ஐரோப்பா கதறுகிறது

ஐரோப்பிய நாகரிகத்தை வெறுக்கும சில பெரியார்களில் அமெரிக்க வாசியான டாக்டர். ரிச்சார்டு கிரிக்ஸ் ஒருவர். இவர் காந்திஜிமீதும், காந்திஜியின் அஹிம்சா கொள்கைமீதும், அளவற்ற நம்பிக்கை கொண்டுள்ளார் இந்தியாவுக்கு விஜயம்செய்து நேரில் காந்திஜியுடன் தர்க்கித்தார். காந்திஜியின் அஹிம்சா தர்மமே உலகம் உய்வதற்குச் சரியான மார்க்கமென்பதை உணர்ந்திருக்கிறார். இவர் இந்தியாவில் நேரில் கண்டவைகளையும், காந்திஜியிடம் நேரில் பேசி, அவரிடமிருந்து தெரிந்து கொண்ட உண்மைகளையும் பற்றி, காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

மேனாட்டு நாகரிகத்தில் எனக்கு அதிக நம்பிக்கை இல்லை. ஆனால், உங்கள் கொள்கையும், சத்தியமான போக்குமே இனிமேல் உலகில் தலையெடுக்கும்; இதை இப்பொழுது யாரும் நம்பாமலிருக்கலாம். ஆனால், உலகிற்கு உங்கள் கொள்கையே உயிர் கொடுக்கப் போகிறதென்பது நிச்சயம். உங்கள் திட்டமாகிய சத்தியாக்கிரகம், கதர், ஹரிஜன முன்னேற்றம், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, கிராம சீர்திருத்தம், கிராமக் கைத்தொழில், வார்தா கல்வித்திட்டம் முதலியவை மிகவும் முக்கியமானவை. அவை இலகுவான திட்டமென்று கூறிவிட முடியாது. அந்த நிர்மாணத் திட்டங்களெல்லாம் இந்தியாவை உருவாக்கக்கூடிய நேர்த்தியான திட்டங்களாகும். ஆகவே, இந்தியாவின் எதிர்கால நம்பிக்கை உங்கள் திட்டங்கள் எனலாம் இந்தியாவுக்கு மட்டுமல்ல; உலகத்துக்கே அவை சிறந்த உருப்படியான திட்டங்களென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், ஐரோப்பா மிருகபலத்தை நம்பி, அழிவை நோக்கி வேகமாகப் போகக்கொண்டிருக்கிறது. ஐரோப்பாவின் டாம்பீக வாழ்க்கை அதைத் தரித்திரநாடாக்கிவிட்டது. பொருளாதார நிலைமை சீர்கெட்டுப் போய்விட்டது. ஐரோப்பா எந்த நிமிஷத்திலும் வறுமைப் படுகுழியில் விழுந்து முறிந்து போகலாம்.

(அடுத்தப் பக்கம் பார்க்க)

கதறும் ஐரோப்பா!

(முன் பக்கத் தொடர்ச்சி)

இன்று இந்தியா எந்த நிலைமையிலிருந்து தவித்துக் கொண்டிருக்கிறதோ, அதே நிலைமைக்கு ஐரோப்பா வரலாம். இந்தியாவின் வறுமையையும், ஒற்றுமையின்மையையும் போக்கி இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கக்கூடியவை உங்கள் திட்டம். அதேபோல் ஐரோப்பாவைப் பாதுகாக்கக் கூடியவை உங்கள் திட்டமென்பதில் சந்தேகமில்லை.

கதரேனக் கதறும்!

இன்று இந்திய ஏழை மக்களுக்குக் காமதேனுவா யிருப்பது கதர். கதரின் பெருமையை இந்தியாவில் சிலர் அறியாமலிருக்கலாம். மேனாட்டு நாகரிகச் சேற்றில் மூழ்கிக் கிடக்கும் மூடப் பிரகஸ்பதிகள் அந்தக் கதரின் தத்துவத்தை அறியாமலிருக்கலாம் ஆனால், கதா இந்தியாவின் உயிர் நாடி; ஏழை மக்களுக்கு உயிர் கொடுப்பது அந்தக் கதர்தான். கதர், கதர் என்று நீங்கள் எப்படி இந்தியாவில் கதறினீர்களோ, அதேபோல் ஐரோப்பா கதர் கதரெனக் கதற வேண்டிய காலம் வரும். இந்த நோக்கத்துடன் நான் ஒரு புஸ்தகம் எழுதி இருக்கிறேன் உங்கள் அஹிம்சைக் கொள்கையே இனி உலகத்தை ஈடேற்றத் தக்க கொள்கை என்பதை அதில் வற்புறுத்திக் கூறிவருகிறேன்.

இந்தியா வழிகாட்டும்

உங்கள் கொள்கையை இந்திய மக்களில், பெரும்பான்மையோர் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். உங்கள் எதிரிகள்கூட அந்தக் கொள்கையை கண்டிக்கமுடியாது. உங்கள் கொள்கையை இந்தியாவில் நடத்திக் காட்டி, இந்தியா உலகத்துக்கு வழி காட்டவேண்டும். எங்கள் தேசங்களில் அதாவது, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களில் இந்தக் கொள்கையை நிலைநாட்ட ஒரு இயக்கத்தை நடத்துவது சுலபமான காரியமல்ல. ஆகவே, என்னைப் போன்றவர்கள் இந்தியாவுக்கு வந்து, இந்தியாவிலிருந்து இந்த இயக்கத்தைப் பலப்படுத்தவேண்டுமென்பது எனது ஆவல். அப்படியானல், ஐரோப்பிய தேசங்களும் எனக்கிருக்கிறது. சென்ற மகா யுத்தத்துக்குப்பின், கடந்த 20 வருடங்களில் ஐரோப்பாவில் நடந்திருக்கும் சம்பவங்களே நான் கூறுவதற்குப் போதிய சான்றாகும். பலாத்காரத்தால் எதையும் சாதிக்கமுடியாது அப்படியே சாதித்தபோதிலும், அந்தக் காரியங்கள் நீடித்திருக்கப்போவதில்லை. அதனல், உலகில் நித்திய சமாதானத்தை ஏற்படுத்தவும் முடியாது. உலக சமாதானத்துக்கும், உலக முன்னேற்றத்துக்கும் ஏற்ற மருந்து உங்கள் திட்டந்தான்!

இந்தியர் கவனிக்க

மகாத்மா காந்தியின் அஹிம்சா கொள்கையிலும், அவர் திட்டங்களிலும் நம்பிக்கை இல்லாத இந்தி

மேனாட்டினரின் அநாகரிகப் போக்கு, அவர்களைப் பழைய காட்டுமிராண்டிகளின் வழிக்கு இழுத்துக்கொண்டு போகிறது

இந்தியாவைப் பின்பற்ற நேரிடும். ஐரோப்பிய நாடுகளுக்கு விமோசனம் கிடைக்கும்.

அழியாத நம்பிக்கை

ஐரோப்பா சீரழிந்து கிடக்கிறது. என்றாலும், அஹிம்சையில் எனக்கு நம்பிக்கை குறையவில்லை. அஹிம்சைக் கொள்கையைக் கடைப்பிடித்தால், மிருக பலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் ஐரோப்பாவைச் சீர்திருத்த முடியுமென்ற நம்பிக்கை

யர் ஒரு அமெரிக்கர் கூறுவதைக் கவனிக்கவேண்டும். வார்தா கல்வித் திட்டம் பார்ப்பனத்திட்டம்! காந்திஜி இந்திய "ராஷ்புடின்."! அவர் காங்கிரஸ் சர்வாதிகாரி! இந்திய ஹிட்லர்!! என்று வாய்க்குவந்தபடி காந்திஜியையும், அவர் திட்டங்களையும், காங்கிரஸையும் திட்டி வரும் புல்லுருவிகளுக்கு ஒரு அந்நியதேச அமெரிக்கரின் உபதேசமாவது மண்டையில் ஏறுமா?

சுறு சுறுப்புள்ளவர்களுக்கு

"ஜாஸோன்"

இது சரியான நேரத்தைக் காட்டுகிறது.



லெவர்—15 ருபிஜ் வல்ஸ் உடையது. அழகான, பொருத்தமுள்ள மூடி-நான்கு வகைகளில் அமைத்துக் கொள்ளக்கூடிய விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

3 வருடம் உத்தரவாதம்

தட்டை அளவு	8¾
குரோம் கேஸ் ரூ.	15
ரோல்டு கோல்டு ,,	25
9 காரட் கோல்டு ,,	55

தபால் செலவு பிரத்தியேகம்

ஜலால் அண்டு சன்ஸ்.,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,

46, ரட்டன் பஜார், சென்னை.

—: பிராஞ்சு :—

மவுண்ட்ரோட், சென்னை.

அபிட்ரோட் ஹைதராபாத், டெக்கான்.

M. A. CHARI & CO.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

ராம பாணம்

டாம் டாம்

உபயோகியுங்கள்

வயிற்று சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட ஔஷதம். ஓர் குடும்ப வைத்தியன் இருந்த மாதிரி உங்களுக்குத் திருப்தி அளிக்கும்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் நெ. 1. குவாலடி கிடைக்கும். சாம்பிலுக்கும், விவராஜாபிதாவுக்கும் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

502, தங்கசாலை தெரு, பி. டி. சென்னை

கவர்ன்மெண்ட் ரயில்வே, பாங்கு, கோவாபரேடிவ் சொஸைடி, வியாபாரிகளுக்கும் சப்ளையர்கள்

G கன்னையா கம்பெனி

இரும்புப்பெட்டி வியாபாரம்

137, பிராட்வே, மதுரை

டாக்டர்

டிராலியின்

ஒடிக்கலோன்

ஜலதோஷம், தலைவலி ஜுரத்துக்கு டாக்டர்களால் சிபார்சு செய்யப்பட்டது.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,

மதுராஸ். & மதுரை.

தாமதம் வேண்டாம்! உடனே எழுதுங்கள்!!

மாதந்தோறும், அவ்வப்போதும் வெளிவரும்

லோகசக்தி பிரசுரங்களை

தென்னாடு முழுவதும் விற்பனை செய்வதற்கு

ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு:— லோகசக்தி ஆபீஸ்,
21-A, சௌத்கூவம் ரோட், சென்னை.

கிளிப்பேச்சு

வெறும் பூச்சாண்டி!

பனங்காட்டு நரிகள்!

பழம் பெருச்சாளிகள் வாதம்

ஊருக்கு உபதேசமா?

மந்திரிகள் மூளை கடன்

கிளியே இவ்வாரம் விசேஷங்கள் என்ன?

இந்த வாரம் முக்கியமான விசேஷங்கள் இல்லை. என்றாலும், சென்ற வாரம் நடந்த மூளைக் கொதிப்பு மகாநாடுகளைப் பற்றியும், அந்த மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களைப் பற்றியும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் எதிரிகளுக்கு எப்பொழுதும் காங்கிரஸ் சிம்ம சொர்ப்பனந்தான். அதிலும், காந்திஜி யென்றால் கேட்கவே வேண்டாம். மனமார காந்திஜிமீது வசை மாரி பொழிகின்றனர். காந்திஜி அவர்களுக்குப் பதில் கொடுக்கப் போகிறாரா? இல்லவே இல்லை. முஸ்லிம் லீக் தலைவர்கள் காங்கிரசை எதிர்க்க என்னென்ன வழிகளுண்டோ, அவைகள் இழிவான முறைகளானாலும் சரிதான், அந்த முறைகளை யெல்லாம் கையாண்டு பார்த்துவிட்டார்கள். அவர்கள் ஜம்பம் சாய்வதற்கில்லை. கடைசியாக ஜின்னாவும், இதர லீக் தலைவர்களும் இஸ்லாத்துக்கு ஆபத்து என்ற பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆதிக்கத்திலிருக்கும் மாகாணங்களிலெல்லாம் முஸ்லிம் உரிமைகள் பறிக்கப் படுவதாகவும், முஸ்லிம் சமூகத்துக்கே ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் ஒரு கயிறு திரித்திருக்கிறார்கள். ஆனால், இவர்கள் கூற்றுக்கு ஆதாரமிருக்கிறதா? அதுதான் குதிரைக் கொம்பு! என்றாலும், லீக்காரர் புகார் கூறுவதில் மட்டும் சப்பட்டையாக இல்லை. அவர்களுக்குச் சரியான ஆதாரங்களும், காரணமும் கிடைக்காவிட்டால் இஸ்லாமதுக்கு ஆபத்து என்ற ஒரு பெரும் போடு போட்டு விடுகிறார்கள். இதனால் முஸ்லிம்களின் ஆதரவு கிடைக்குமென்பது அவர்கள் நினைப்பு. இந்த எண்ணத்திலும் மண் விழுந்து விட்டது. அந்தக் காலமும் மலையேறிவிட்டது. இஸ்லாத்துக்கு ஆபத்து என்றுகூறியதும், முஸ்லிம்கள் அடிதடித்த காலமுண்டு. ஆனால், இப்பொழுதோ முஸ்லிம் மக்கள் தீர ஆராய்ந்தே காரியஞ் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். வெறும் கூக்குரலைக் கண்டு அவர்கள் ஏமாந்து போகவில்லை. லீக்காரர் இஸ்லாம் மதத்தைக் காட்டிப் பூச்சி பிடிக்கிறார்கள். தெற்கே சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பனியப் பூச்சாண்டி காட்டி ஆதரவு தேட நினைக்கிறார்கள். இவர்களுக்கு ஆதரவு எப்பொழுதும் பூஜ்யந்தான். நியாயமான புகார்களுக்கு எப்பொழுதும் பொது ஜனங்கள் செவி சாய்ப்பார்கள்; ஆதரிக்க முன் வருவார்கள். ஆனால், நியாயமில்லாத எந்த புகாரையும், பொது ஜனங்கள் ஆதரிக்கவே மாட்டார்கள். லீக் சு. ம. ஜஸ்டிஸ் கட்சியாருக்கு பொதுஜன ஆதரவே கிடையாது; அவர்கள் கிளர்ச்சியும் புரட்சியும் ஆதாரமற்றது. வீண் கலவரத்தை உண்டுபண்ண அவர்கள் கட்சிக்கு ஆதரவு தேட நினைப்பதை பொது மக்கள் அறவே வெறுத்துத் தள்ளிவருகின்றனர். இனிமேலும், வெறுத்துத் தள்ளிவிடுவார்களென்பதில் சந்தேகமில்லை

அது மெய்தான்; இந்த வகுப்புவாதிகளுக்கு இனி மேல் காட்டில் இடமில்லை

ஆமாம்; முஸ்லிம் சமூகத்தைக் காங்கிரஸ் மந்திரிகள் நசுக்கி, அவர்கள் உரிமைகளை அழித்து வருவதாக ஜின்னா கோஷ்டியார் கிளப்பிய காபுராவுக்கு, பண்டித ஜவார்லால் சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறார். ஜின்னா கூறும் அநியாயங்கள் எந்த மாகாணத்தில் எப்பொழுது நடந்ததென்று விபரமாகக் கூறும்படி அறைகூவி அழைத்திருக்கிறார். மற்ற மாகாணங்கள் போகட்டும் ஐக்ய மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு எந்தவிதமான ஆபத்துக்கள் ஏற்பட்டதென்பதை ஜின்னா நிரூபிக்க முடியுமாவென்று சவால் விடுத்திருக்கிறார். அப்படி அநீதங்கள் நடந்தால், அவைகளைப்பற்றி விசாரிக்க உடனே ஒரு கமிட்டியை நியமித்து, அதற்கு ஈடுசெய்ய ஜவார்லால் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஜின்னாவுக்கு இது சரியான சூடு. அவர் எந்த அநீதங்களை நிரூபிக்க முடியும்? எந்த மாகாணத்தில் அவ்வித அநீதங்கள் நடந்தன? ஒன்றுமே கிடையாது ஜின்னா பிர்பூராஜா அறிக்கையைக் காட்டி மழுப்பியிருக்கிறார். அவர்கள் கூறிய புகார்களெல்லாம் அவர்கள் கற்பனா சக்தியால் உருவான வெறும் புகார்தான். உண்மையாக நடந்தவை அல்ல. இத்துடனாவது லீக் தலைவர்கள் வீண் புரளி செய்யாமல் வாயை மூடிக்கொண்டிருப்பார்களா?

அது எது? அவர்கள் லீக் கட்சிக்கு ஆதரவு தேட அவர்கள் ஏதேனும் புகார் கூறிக்கொண்டுதானிருப்பார்கள். முஸ்லிம்களோ அல்லது, ஹிந்துக்களோ அவர்கள் கூறுவதைக் காதில் போட்டுக்கொள்ளாமலிருப்பதுதான் அவர்கள் வாயை அடைப்பதற்குச் சரியான வழி.

வகுப்புவாதக் கட்சிகளாகிய லீக், ஹிந்து மகா சபை, ஜஸ்டிஸ், சு. ம. கட்சிகளை இந்திய மக்கள் ஒரு போதும் பொருட்படுத்தக்கூடாது, அவற்றை ஆதரிக்கவும் கூடாது இந்திய மக்கள் வகுப்புவாதத்தைக் கனவிலும் நினைக்கக்கூடாது வகுப்புவாதத்துக்கு இடங்கொடுத்தால் அது விஷம்போல் ஏறி, இந்திய முற்போக்குக்கே உலை வைத்துவிடுமென்பது திண்ணம். ஹிந்து மகாசபை முஸ்லிம்களைக் கண்டிக்கும்; முஸ்லிம்கள் இந்துக்களைக் கண்டிப்பார்கள்; ஜஸ்டிஸ், சு. ம. காரர் பார்ப்பனீயத்தைக் கண்டிப்பார்கள். இதெல்லாம் சுயநலத்தை உத்தேசித்துச் செய்யும் கிளர்ச்சிகளே யொழிய, தேசிய நலன் கோரியல்ல வென்பது ஞாபகமிருக்கவேண்டும். வகுப்புவாதத்துக்கு இடங் கொடுக்காமல், அந்த வகுப்புவாதப் பேயின் தலையை நசுக்கிவிடுவோமே யானால், இந்தியா ஒரு தேசமாக விளங்கும் அதி தீவிரத்தில் முன்னேற்றமடையும். இந்திய சுதந்திரத்தை எளிதில் பெற்றுக்கொள்ளலாம். இந்த வகுப்புவாத மகாநாடுகளுடன் பம்பாயில் மிதவாதிகள் மகாநாடும் ஒன்று நடந்தது. மிதவாதிகள் பழைய பெருச்சாளிகள்; நாயின் வாலை நிமிர்த்தலாம், இந்த மிதவாதிகளின் மிதவாதத்தைச் சரிப்படுத்தவே முடியாது. அது ஒரு நீங்காத நோய் போல் மிதவாதிகளைப் பிடித்திருக்கிறது அந்த நோய்க்கும் மருந்து கிடையாது. அக்கட்சியிலுள்ள பலர் தீவிர ராஜ பக்தர்கள் என்றாலும், பெடரேஷனை அவர்கள் ஆக்ரோஷமாகக் கண்டித்திருக்கிறார்கள். ஆனால், அந்த பெடரேஷனை எதிர்ப்பது எப்படி? அதற்குத்தான் வழியைக் காணோம். சட்டமறுப்பு இயக்கம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம், வரி மறுப்பு என்றாலே மிதவாதிகளுக்குக் கால் கை நடுக்கம். அப்பேர்ப்பட்ட வீரப் புலிகள் சட்டமறுப்பை எப்படி ஆதரிப்பார்கள். ஆகவே, சட்ட மறுப்பைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள் ஆனால், பெடரேஷனை எதிர்க்கப் புது வழி எதையேனும் காட்டினார்களா? அதுவுமில்லை. அதற்கு அவர்களுக்கு மூளையும் கிடையாது; ஆண்மையுமில்லை. இந்த மிதவாதிகளுக்குப் பயந்து காங்கிரஸ்காரர்கள் பெடரேஷனை எதிர்க்காமல் இருப்பார்களா? ஒருபோதுமில்லை. பெடரேஷனைக் காங்கிரஸ்காரர் எதிர்த்தே தீருவார்கள். எதிர்ப்பதற்குச் சரியான ஆயுதம் சட்டமறுப்புத்தான். பெடரேஷன் சம்பந்தமாகப் பிரிட்டிஷார் வழிக்கு வந்தாகவேண்டும்; இன்றேல், சட்டமறுப்புப் போராட்டம் ஒன்று காத்துக்கொண்டிருக்கிறது அந்தப்போராட்டம் எப்பொழுது ஆரம்பமாகிறதோ தெரியவில்லை.

பெடரேஷனை எதிர்க்காவிட்டால், பிரிட்டிஷார் வழிக்கு வரமாட்டார்கள் சட்டமறுப்பு ஆயுதமொன்றுக்கே அவர்கள் பயப்படுவார்கள். மிதவாத, லீக், சு. ம. மிரட்டல்களையும், வெறும் கண்டனத் தீர்மானங்களையும் கண்டு பிரிட்டிஷார் அசையப் போவதில்லை.

ஆமாம்; பிரிட்டிஷார்தான் பனங்காட்டு நரிகளாயிற்றே! அவர்களா வெறும் சலசலப்பைக் கண்டு அஞ்சுகிறவர்கள். பிரிட்டிஷார் பயப்படும் கட்சி ஒன்று இருக்குமேயானால் அது காங்கிரஸ் தான் காங்கிரசுக்கு இன்று உயிராக இருக்கும் காந்திஜி ஒருவருக்குத்தான் பயப்படுவார்கள். காந்திஜி இது சம்பந்தமாக ஒன்றுமே சொல்லவில்லை. அவர் சிவராமத்திலிருந்து, பர்தோலிக்குப் போயிருக்கிறார். அங்கு தான் அடுத்த காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் நடக்கப் போகிறது காந்திஜியைக் காண சர்தார் பட்டேலும், பஜாஜும் பர்தோலிக்கு வந்திருக்கிறார்கள். காந்திஜியைக் கண்டு பேசச் சென்ற சுபாஷ் பாபு அதிக நோய் வாய்ப்பட்டிருந்தாரல்லவா? அவர் ஓரளவு குணமடைந்ததும் கல்கத்தாவுக்குப் போய்விட்டார். அவர் நோய் காரணமாக சுபாஷ் பாபு தமிழ் நாடு யாத்திரையை தற்காலிகமாக கைவிடவேண்டியதாயிற்று. ஆனால், திரும்பவும் பிப்ரவரிமாதம் முதல் வாரத்தில் தமிழ் நாட்டிற்கு வருவதாய் தெரிய வருகிறது. அவர் இன்னமும் பூர்ண குணமடையவில்லை. அவரை ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி டாக்டர்கள் கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறார்கள். கல்கத்தாவில் கூடிய இந்திய மாணவர்கள் கூட்டத்துக்கு பண்டித ஜவார்லால் சென்றிருந்தார். மாணவர்களுக்கு அவர்செய்திருக்கும் உபதேசம பொன்னே போல் போற்றத் தகுந்தது. பிரிட்டிஷாருக்கும் தலையில் ஒரு சரியான அடி போட்டிருக்கிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மாண்டுவிட்டது; அது இனிமேல் தலையெடுக்க முடியாது இந்தியர் தேடும் பூர்ண சுயராஜ்யத்தைப் பிரிட்டிஷார் இனிமேல் தடுக்கவும்

(அடுத்த பக்கம் பார்க்க)

கிளிப்பேச்சு

(முன் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்று பண்டிட்ஜி கூறுகிறார். அது முற்றிலும் உண்மை. பிரிட்டிஷ் கிழச் சிங்கத்தின் வீராவேசம் போய்விட்டது. அதற்கு இருந்த மதிப்பும் குறைந்துவிட்டது. அதின் பல்லைப் பிடுங்கி, அதின் செல்வாக்கை சீரழித்தவர்கள் ஹிட்லரும், முஸோலினியும்தான். இன்று பிரிட்டிஷ் சிங்கம் அவர்கள் காலடியில் விழுந்து, அவர்கள் தயவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த ஆபாசமான நிலைமைக்கு பிரிட்டிஷ் சிங்கம் வருமென்று யாராவது எதிர்பார்த்தார்களா? இல்லவே இல்லை. இவ்வித நிலைமைக்குப் பிரிட்டிஷார் வர அவர்களே காரணமென்று துணிந்து சொல்லலாம். இந்திய மக்கள் கோரிக்கைகளைக் கவனித்து இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் பொறுப்பாட்சி கொடுத்திருப்பார்களேயானால், பிரிட்டன் ஹிட்லர், முஸோலினிக்குப் பணியவேண்டியதில்லை அவர்கள் பிரிட்டிஷ் சிங்கத்தின் பல்லைப் பிடுங்குவதற்குப் பதிலாக பிரிட்டனும், இந்தியாவும் சேர்ந்து ஹிட்லர், முஸோலினியின் பற்களைப் பிடுங்கி இருக்கும். ஆனால் விதி யாரை விட்டது? பிரிட்டிஷ் சிங்கத்தின் வினைப்பயனை அது அனுபவித்துத்தானே தீரவேண்டும்.

ஆமாம், வினை விதைத்தவன் வினையை அறுத்துத்தானே தீரவேண்டும். பிரிட்டிஷார் எத்தனை தேசங்களுக்குத் துரோகஞ்செய்திருப்பார்கள்; அத்தனை தேசங்களின் தோஷம் சும்மா விட்டுவிடுமா? அது போகட்டும்; சமஸ்தானங்கள் எந்த நிலைமையிலிருக்கின்றன?

ராஜ்கோட் சமஸ்தான மக்கள் வெற்றி இதர சமஸ்தானங்களுக்கு நல்ல புத்தி கற்பித்திருக்குமென்று எண்ணினேன். ஆனால், சமஸ்தான மன்னர்களுக்கு இன்னம் சரியான புத்தி வரவில்லை. கட்ச் சமஸ்தானத்தில் பொறுப்பாட்சிப் போராட்டம் மும்முரமாக இருக்கிறது; போலீஸ் தடியடி தர்பார் தலைவிரி கோலந்தான். நந்தகானில் இன்னமும் முழுமோசம்; போலீஸ் தடியடியால் அங்கு 400 பேர்களுக்குக் காயம். 25 பெண்கள் காயம்பட்டு ஆஸ்பத்திரிகளுக்குச் சிகிச்சைக்குச் சென்றனர். ஹைதராபாத் சர்க்கார் இன்னமும் பிடிவாதமாக இருக்கிறார்கள். அங்கு உஸ்மானிய கலாசாலையில் வந்தேமாதரக் கீதம் பாடியதற்காக இந்து மாணவர்கள் பலரை டிஸ்மிஸ் செய்தார்கள் அந்த மாணவர்கள் மீண்டும் கலாசாலையில் சேர மறுத்துவிட்டனர். வந்தேமாதரக் கீதத்துக்கு இருக்கும் தடையை நீக்கினாலொழிய கலாசாலையில் சேரமுடியாதென்று கூறிவிட்டார்கள். நிஜாம் சர்க்கார் பிடிவாதமாக இருந்தால், பல மாணவர்கள் நாகபுரி கலாசாலைக்குப் போய்விட்டார்கள். திருவாங்கூர் சர்க்கார் ஹைதராபாத் சர்க்காருக்குச் சப்பட்டையல்ல. திவான் சர். சி. பி ராமசாமிஐயரின் அடக்குமுறை வெறி குறைந்ததாகக் காணோம். திருவாங்கூர் மகாராஜாவிடம், காங்கிரஸ் தலைவர்கள், திவான்மீது புகார் கூறியிருக்கும் மகஜரை வாபஸ் வாங்கியே தீரவேண்டுமென அவர் கேட்டார். காந்திஜியும் அப்படியே திருவாங்கூர் காங்கிரஸ் தலைவர்களுக்கு யோசனை சொன்னார் திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் தலைவர்கள் தயங்கினார்கள் கடைசியாக, தலைவர்கள் பலர் கைதியான பிறகு அந்த மகஜரை வாபஸ் வாங்கிவிட்டார்கள் சர். சி. பி சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்துவிட்டார். ஆனால், பொறுப்பாட்சி சம்பந்தமாக ஒரு முடிவுக்கும் வராமல் கல் பிள்ளையார் போல் இருக்கிறார். சர். சி. பி. அவருடைய வாக்கு நாணயத்தைக் காப்பாற்ற வேண்டும். திருவாங்கூர் போராட்ட சம்பந்தமாக ஒரு நல்ல சமரச முடிவுக்கு வரவேண்டும். மீண்டும் காங்கிரஸ்காரரைப் பழிவாங்க நினைப்பாரேயானால், அவர் தோல்வியடைவது நிச்சயம். இந்தியர், ஏன், உலக மக்கள் அனைவரும் அவரை வெறுக்க நேரிடும். இறுதியில் சி. பி மானமிழந்து திரும்ப நேரிடுவது திண்ணம்.

வேறு விசேஷமென்ன?

கொச்சி மக்களுக்கு ஏதோ பிரமாதமாக சீர்திருத்தம் கொடுத்துவிட்டதாக திவான் சர் ஷண்முகஞ் செட்டியார் பெருமை பேசினார் அவரைத் தாங்கி சு. ம. பத்திரிகைகளெல்லாம் கும்மாளம் போட்டன கவைக்குதவாதென, கொச்சி மந்திரியே கண்டித்திருக்கிறார். கொச்சி சீர்திருத்தம் பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் கொடுத்த இரட்டையாட்சியை விட மிமோசமானதாம். இரட்டை ஆட்சியில் மந்திரிகளுக்கிருந்த சுதந்திரம் கூடக் கொச்சி மந்திரிக்கு இல்லையென, கொச்சி மந்திரி டாக்டர் மேனன் கூறுகிறார். கொச்சி சமஸ்தான சீர்திருத்தத்துக்கு வேறு அத்தாட்சி என்ன வேண்டும்.

ஆமாம், ஆதியிலேயே காங்கிரஸ்காரர் கொச்சி சீர்திருத்தத்தை கண்டித்தார்கள்; ஆனால், சு. ம. களுக்கும், ஷண்முகஞ் செட்டியார் சகபாடிகளுக்கும் மூக்கின் மேல் கோபம் வந்துவிட்டது இப்பொழுது கொச்சி மந்திரியே கண்டிக்க முன்வந்துவிட்டார் இதற்கு சு. ம பத்திரிகைகள் என்ன பதில் கூறப்போகின்றன?

கூறுவதற்கு என்ன இருக்கிறது. கொச்சி சீர்திருத்தத்தின் யோக்யதை அவ்வளவுதான்! சமஸ்தானங்கள் நிலைமை ஒருபுறம் இருக்கட்டும். சென்னை நிலைமையைக் கவனிப்போம். சென்னைக் காங்கிரஸ் மந்திரிகள் சில சமயங்களில் மூளையைக் கடன் கொடுத்துவிடுகிறார்கள். ஊருக்கு உபதேசம் செய்கிறார்களே யொழிய, அந்த உபதேசங்கள் அவர்களுக்கும் அவசியமென்பதை மறந்துவிடுகிறார்கள். பிறருக்கு உபதேசஞ் செய்யும் மந்திரிகள், அந்த உபதேசம்போல் அவர்களே நடக்கவேண்டும் வருடந்தோறும், ஜனவரி முதல் தேதி, அல்லது இரண்டாந் தேதி ராணுவப் பவனி வருவது வழக்கம். பிரிட்டிஷ் மன்னருக்கு அவர்களின் ராஜ விசுவாசத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதே இந்தப் பவனியின் நோக்கம ஆனால், இரும்படிக்கிற இடத்தில் ஈக்கு என்ன வேலை? ராஜ விசுவாசப் பவனி வரும் ராணுவ பவனியில் காங்கிரஸ் மந்திரிகளுக்கு என்ன வேலை ஜனவரி மாதம 2ந் தேதி நடந்த ராணுவப் பவனிக்கு மந்திரிகள் ராமநாதன், முனுசாமி பிள்ளை, கோபால் ரெட்டியார் முதலியோர் போயிருந்தார்களாம்! ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இந்திய பரிபூர்ண சுதந்திரத்துக்குப் போராடும காங்கிரஸ் மந்திரிகளுக்கு ராணுவப் பவனியில் என்ன வேலையோ தெரியவில்லை அவர்கள் வேடிக்கையைப் பார்க்க சொந்த ஹோதாவில் போயிருந்தார்களா, அல்லது உத்தியோக தோரணையில் சென்றிருந்தார்களா? உத்தியோக தோரணையில் சென்றிருந்தால் அது குற்றம் காங்கிரஸ் மந்திரிகளுக்கு அங்கு வேலை கிடையாது. மந்திரிகள் என்பதற்காக அது குற்றமில்லாமல் போகாது. யாரானாலுஞ் சரிதான், குற்றம் குற்றமே. இந்த மந்திரிகள் மீது காங்கிரஸ் கமிட்டியார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா? இன்றேல், மந்திரிகளே தாங்கள் செய்தது தவறு என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுவார்களா?

காங்கிரஸ்காரர் என்று பதவி ஏற்றார்களோ, அன்றே காங்கிரஸ் கட்டுப்பாடு என்பது மண்ணாங்கட்டியாகி விட்டது; காந்திஜிதான் கட்டுப்பாடு கட்டுப்பாடு என்று தலையில் அடித்துக்கொள்ளுகிறார். ஆனால், அவர் வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்போர் வெகு சிலரே. அதிலும் மந்திரிகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் வெகு தூரமாகி விட்டது.

மெய்தான்; மந்திரிகளுக்குக் கட்டுப்பாடு என்ற எண்ணமே இல்லை அவர்கள் எது வேண்டுமானாலுஞ் செய்யலாம். எங்கும் போகலாம், கட்டுப்பாட்டுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களல்ல வென்ற தவறுதலான எண்ணம் அவர்கள் மூளையில் ஏறியிருக்கிறது. அந்த மோசமான எண்ணத்தைப் போக்கவேண்டும் மந்திரிகள்மீது காங்கிரஸ் கமிட்டியார் உடனே ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்களேயானால் மந்திரிகளுக்குப் புத்தி வரும். இனிமேல் எச்சரிக்கையாக இருப்பார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்குத் தாட்சண்யமென்பதே கிடையாது; அவர் காங்கிரஸ் கட்டுப்பாட்டை உயிர் போல் நினைப்பவரென்று சொல்லுகிறார்கள். அப்படியானால், தலைவர் ராமசாமி ரெட்டியார் மூன்று மந்திரிகள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவாரா?

அவசியம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதுதான். அதுபோகட்டும்;வேறு விசேஷமுண்டா?

ஒரு முக்கியமான விசேஷமுண்டு மாஜி காங்கிரஸ் தலைவர் எஸ். சீனிவாச ஐயர் அவர் அபிப்ராய பேத காரணமாகக் காங்கிரஸிலிருந்து ஒதுங்கியிருந்தார். அவர் மீண்டும் காங்கிரசுக்குச் சேவை செய்ய வந்து விட்டார். புது வருட தினத்தில் சென்னைக் கடற்கரையில் பெடரேஷனை எதிர்க்கப் பிரமாண்டமான கூட்டம் நடந்தது அதற்கு சீனிவாச அய்யங்காரே தலைமை வகித்தார். பெடரேஷனைக் கண்டித்தும், காங்கிரஸ் மந்திரிகளைப் பாராட்டியும் பேசினார். முதன் மந்திரி ஆச்சாரியாரும் அக்கூட்டத்துக்கு வந்திருந்து அய்யங்காரை வரவேற்றுப் பேசினார். இந்த இரு தலைவர்களுக்கும் பெரும் அபிப்ராய பேதம் இருப்பதாகப் பலர் எண்ணியிருந்தார்கள். அவ்வித அபிப்பிராய பேதமே கிடையாதென ஆச்சாரியார் பகிரங்கமாகத் தெரிவித்தார். எஸ். சீனிவாச அய்யங்கார் மீண்டும் காங்கிரஸில் சேருவதை தமிழ் மக்கள் வரவேற்பார்களென்று நினைக்கிறேன். அவருடைய போக்கை அறிந்த தமிழர் அவரை வரவேற்பார்களென்பதில் சந்தேகமில்லை. கடற்கரை கூட்டத்துக்கு சுமார் 35, ஆயிரம் அல்லது, 40 ஆயிரம் தமிழ் மக்கள் வந்திருந்ததே அவர்கள் காங்கிரஸை எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்கள், பெடரேஷனை எதிர்க்கிறார்களென்பதைக் காட்டப் போதிய சான்றாகும். அவ்வளவு பெரிய கூட்டத்தில்கூட சு. ம. காலிகள் சும்மா இருந்தார்களா? ஆச்சாரியாரைக் கவண் கல்லால் அடிக்க ஒருவன் குறி பார்த்தான்; போலீசார் உடனே அவனைக் கைதுசெய்து கொண்டுபோய் விட்டார்கள். கூட்டத்தில் குழப்பஞ் செய்த வேறு சிலரையும் போலீசார் அப்புறப்படுத்தினர். காலித்தனம் செய்யும் சுயமரியாதைக் காலாடிகளுக்கு எவ்வளவு திமிர் ஏறியிருக்கிறதென்பதற்கு இது ஒரு உதாரணம். காலித்தனஞ் செய்து அவர்கள் உடலில் தழும்பேறிவிட்டது. அதை அடக்குவது சிரமந்தான். இந்தக் காலித்தனத்துக்கு இடங்கொடுத்த ஆச்சாரியாருக்கு இதுவும் வேண்டும்; இதற்கு மேலும் வேண்டும். கவண்கல் அவர் மீது பாய்ந்திருக்கவேண்டுமென்பது எனது விருப்பம். அப்பொழுதுதான் ஆச்சாரியார் உண்மை நிலைமையை உணர்ந்திருப்பார். ஆச்சாரியாருக்கு இதிலிருந்தாவது புத்தி வருமென்று நினைக்கிறேன். அவர் மீண்டும் பழைய வேதாந்தம் பேசுவாரேயானால், காலிகள் கொட்டத்தை அடக்கப் பொது ஜனங்கள் வழி தேடிக்கொள்ள வேண்டியதுதான்.

சீனாவில் குவாங்ஷி ஜில்லாவில் சீனப் பெண்கள் ஒன்றுசேர்ந்து ஒரு பெரிய ரஸ்தா ஒன்று போட்டிருக்கிறார்கள்.

ஜப்பான் அலங்கோலம்

சீனர் மாய வேலை - - - - வெற்றி சீனருக்கே

ஜப்பானிடம், சீன தோல்வி யடைவதற்கும், முக்கியமான நகரமாகிய காண்டன் நகரை இழந்ததற்கும் பிரிட்டனே காரணமென மார்ஷல் ஷியாங்கே-ஷேக் கூறுகிறார். சீனவுக்குத் துரோகஞ் செய்த பிரிட்டன் திடீரென சீனவுக்குக் கடன் கொடுக்கவும், யுத்த தளவாடங்கள் கொடுத்துதவவும் முன் வந்தது. பர்மா வழியாக சீனவுக்கு வரும் யுத்த தளவாடங்கள் யாவும் பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வருபவை; இதற்குக் காரணமுண்டு. சீனவுக்கு இதுவரையில் உதவிச் செய்து வந்தது ரஷியா. சீன வெற்றி பெறுமேயானல், சீன வர்த்தகமெல்லாம் ரஷியாவுக்கே போய்ச் சேரும். இதுவரையில் சீன வர்த்தகத்தில் ஏக உரிமை அநுபவித்து வந்தது பிரிட்டனும், அமெரிக்காவுந்தான். ஆகவே, அந்த வர்த்தக உரிமையை ரஷியா கொள்ளையடிக்கப் பிரிட்டனுக்கு விருப்பமில்லை. சீனவுக்கு, பிரிட்டனும், அமெரிக்காவும் கடன் கொடுத்து உதவிச் செய்வதின் ரகசியம் இதுதான்.

அபார கடன்

சீன யுத்தத்தால் ஜப்பான் சீரழிந்து போய்விட்டது. அங்கு கடன் அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஜப்பான் வர்த்தகமும் அதிககுலைந்துகொண்டே போகிறது. சீன-ஜப்பான் யுத்தம் இன்னும் ஒரு வருடத்துக்கு நீடிக்குமேயானல், ஜப்பானில் பஞ்சம் தலைகாட்டுவது நிச்சயம். இந்த ஆபத்தை உணர்ந்தே ஷியாங்-கே-ஷேக் யுத்தத்தை நீடித்துக்கொண்டே போனார். இதே ஆபத்தை உணர்ந்தே ஜப்பான் மந்திரிகள் சீனவுடன்சமரசஞ் செய்துகொள்ள முன் வந்தார்கள். ஷியாங்-கே-ஷேக்கிற்கு ஜப்பான் நிலைமை நன்ருகத் தெரியும். சமரம் பேசுதென்ருல் ஜப்பானியர் சீனவிருந்து வெளியேறி, சீனவுக்குச் சமத்வம் கொடுத்து சமரசப் பேசட்டும்; இன்றேல், ஜப்பான் சமரசத்தை ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார். ஜப்பானியர் செலவுக்கு இவ் வருடம் சுமார் 215,500,000 பவுன் தேவையிருக்கிறது. அதாவது சென்ற வருடத்தைவிட 8,000,000 பவுன் அதிகம். இந்தப் பணமெல்லாம் சீன-ஜப்பான் யுத்தத்துக்காகவே விரையமாகிறது. ஜப்பானின் நிலைமை மிகநெருக்கடியில் வந்துசேருமென அறிந்தே கோனுய் மந்திரி சபை ராஜிநாமாச் செய்துவிட்டது. புதிய மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது. இந்த மந்திரிசபை கூட அதிகநாள் நீடித்திருக்காது என்று பலர் ஜோசியம் கூறுகிறார்கள்.

ஷியாங்-கே-ஷேக் உறுதி

ஷியாங்-கே-ஷேக் யுத்தத்தைக் கடைசிவரையில் நடத்தியே தீருவதென உறுதிகொண்டிருக்கிறார் அவர் உறுதியைக் கவனித்தால் 1939ம் வருடத்திலும் போராட்டம் தீவிரமாக நடக்குமென்று தெரிகிறது. சீனவில் மாயமான ராணுவமொன்றிருக்கிறது. அந்த மாய ராணுவம் ஜப்பான் ராணுங்கள் மீது திடீரெனப் பாய்ந்து அப்படியே ஜப்பான் ராணுவங்களை அழித்துவிடுகிறது. ஜப்பான் ராணுவங்கள் போன இடமே தெரியவில்லை. ஜப்பான் ராணுவஜெனரல்கள்கூடத் திடீரென மறைந்துவிடுகிறார்கள். இது ஜப்பானியர் மனதில் பெரும் திகிலை உண்டுபண்ணியிருக்கிறது. சீனவிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்குத் தளபதியாக விருந்த ஜெனரல் ஹாடி என்பவருக்குப் பதிலாக ஜெனரல் ஓடொஸாயமாதா என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்; தற்போது ஜப்பானின் முதன் மந்திரியாக இருப்பவர் பரான் ஹீரானுமு இவர் ஒரு தீவிர தேசியவாதி. ஆகவே இவருடைய மந்திரி சபை நெடுங்காலம் நீடித்திருக்க முடியாதென்று கூறுகிறார்கள். ஜப்பான் ராணுவ அதிகாரிகள் ராணுவத் திமிர் கொண்டவர்கள் ஆகவே, அவர்கள் தீவிரவாதியான ஹீரானுமுவை பதவியிலிருக்கவிடமாட்டார்களெபது நிச்சயம். இந்த நிலைமையில் வெற்றி சீனருக்கேயெனசீனவிலிருந்து சமீபத்தில் இந்தியா திரும்பிய ஸ்ரீமதி மூரியல் லெஸ்ட்டர் கூறுகிறார்.

லண்டனில் ஒரு அபூர்வமான சங்கமொன்றிருக்கிறது. அந்தச் சங்கத்தில் 13 மெம்பர்கள்தான். ஆகவே, அதற்கு 13 பேர் சங்கமென்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்தச் சங்கத்தார் சென்ற மே மாதம் 13-ந்தேதி, 12 மணிக்குப் பின் சரியாக ஒரு மணிக்கு, அதாவது 13-வது மணிக்கு 13 மேஜைகளில், 13 பேர்களாக உட்கார்ந்து விருந்து சாப்பிட்டார்கள். 13-வது இலக்கத்தில் அவர்களுக்கு ஒரு விதப் பைத்தியம் போலும்!

சொக்கநாதன்

—: அல்லது :—

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல் கீழ்கண்ட ஊர்களிலுள்ள
"தமிழ் மணி" ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

புஸ்தகம் 1-க்கு விலை அணு 12.

மதுரை	நாமக்கல்
திருச்சினுப்பள்ளி	தேவகோட்டை
கோயம்புத்தூர்	ஈரோடு
நாகப்பட்டணம்	கும்பகோணம்
நாட்டரசன் கோட்டை	பொள்ளாச்சி
பணகுடி	உதகமண்டலம்
நிலக்கோட்டை	மன்னர்குடி
பவானி	புதுக்கோட்டை

மானேஜர்
தமிழ் மணி.



மதிப்புரை

ஹரிஜன சகாயம்

ஹரிஜன சகாயம் என்னும் சிறு புஸ்தகமொன்று வரப்பெற்ருேம். ஹரிஜனங்களுக்குக் காந்திஜியும், காங்கிரசும், காங்கிரஸ் சர்க்காரும் என்னென்ன நன்மைகள் செய்திருக்கிருர்களென்பதைப் பற்றித் தெளிவாகவும், சுருக்கமாகவும் ஸ்ரீ. எ. கே. சந்திரசேகர முதலியார் எழுதியிருக்கிறார். ஹரிஜனங்களுக்குக் காங்கிரஸ்காரர் ஒன்றும் செய்யவில்லை; காங்கிரஸ்காரரை நம்பி ஹரிஜனங்கள் மோசம் போகவேண்டாமென, சுயமரியாதைக்காரரும், ஜஸ்டிஸ் கட்சியினரும், காங்கிரஸ் எதிரிகளும் தீவிரமாகப் பிரசாரஞ் செய்யும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ. முதலியார் இச் சிறு புத்தகத்தை வெளியிடுவது ஹரிஜனங்களுக்கும் காங்கிரஸ்காரருக்கும் அதிக நன்மை பயக்குமென்பதில் சந்தேகமில்லை. இச் சிறு புஸ்தகத்தை எல்லோரும், சகல தமிழரும் கட்டாயம் படித்துப் பயன் பெறவேண்டும்.

இதன் விலை அணு 2.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர்,
ஸ்பார்ட்டன் கம்பெனி,
156, பிராட்வே மதராஸ்.

தமிழ் மணி

சென்னை—வெகுதானியளு மார்கழி 24உ (8-1-1939)

எட்டுச் சுரைக்காயல்ல!

ராஜபாளையத்தில் கூடிய தமிழ் மாகாண மகாநாட்டில் பல அரிய தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். சென்னைக் காங்கிரஸ் மந்திரி சபையைப் பாராட்டியிருப்பதோடு, பெடரேஷனை எதிர்த்தும் தீர்மானங்கள் நிறைவேற்றின. கிராமப் பஞ்சாயத்து, ஜில்லா போர்டுகள் சம்பந்தமாகவும் சில தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன. பஞ்சம் ஏற்பட்டிருக்கும் ஜில்லாக்களுக்கு நிவாரண மளித்து, கிஸ்தி வஜா செய்யும்படி காங்கிரஸ் மந்திரிகளை கேட்டிருக்கின்றனர். சர்க்கார் சிக்கன சம்பந்தமாகவும் சில யோசனை கூறியிருக்கின்றனர். விவசாயிகளுக்கு உடனே செய்யக் கூடிய உதவியை வற்புறுத்தி இருப்பதோடு, தாய் பாஷையாகிய தமிழை 10 வது பாரம் வரையில் கட்டாயப் பாடமாக்கவும், ஹிந்தியின் அவசியத்தையும் தமிழ் மக்களுக்கு உணர்த்திப் பல தீர்மானங்கள் செய்திருப்பது பாராட்டத்தக்கது. தீர்மானங்கள் யாவும் சிலாக்கியமானவைதான். ஆனால், அந்தத் தீர்மானங்கள் வெறும் எட்டுச் சுரைக்காயாக இருக்கக்கூடாது. அந்தத் தீர்மானங்களைக் கிரியாம்சையில் செய்து காட்டவேண்டும். அப்பொழுதுதான் தமிழர் நலம் பெறுவார்கள்; காங்கிரஸ் மந்திரி சபைக்குப் போதிய ஆதரவு கிடைக்கும் மகாநாடு கூடி முடிந்துவிட்டது; தீர்மானங்களும் நிறைவேறிவிட்டன: இனிமேல் அந்தத் தீர்மானங்கள் எக்கேடு கெட்டாலென்னவென்று தலைவர்களும், சென்னை மந்திரிகளும் நினைக்கக்கூடாது. அப்படியானால், வீணாகப் பணம் செலவு செய்து அந்த மகாநாடே கூட்டாமலிருந்திருக்கலாம். மந்திரிகளும், தலைவர்களும் அவர்கள் இஷ்டம் போல் காரியம் செய்திருக்கலாம். அவர்களை யாரும் தட்டிக் கேட்கப் போவதில்லை.

தலைவர் கடமை

தமிழ நாட்டுக்குத் தலைவராக வந்திருக்கும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் நிர்மாண வேலையில் அதிக ஊக்கமுடையவரென்று தெரிகிறது. அவர் பெரிய காந்தி பக்தர் அஹிம்சா வீரர். ஆகவே, தமிழ் மாகாண மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை துரிதத்தில் அமுலுக்குக்கொண்டுவரத் தீவிரமாக வேலைசெய்வாரென்று நம்புகிறோம். தலைவருடைய முக்கிய கடமை அது வென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

வஞ்சகமல்லவா?

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் தேர்தல் 8ந் தேதியாகிய இன்று நடைபெறுகிறது. கமிட்டியில் அங்கத்தினர்களாகவரப் பலர் போட்டி போடலாம். கமிட்டியில் பழைய பேர்வழிகளும், ஹிந்துக்களுமே நிறைந்திருப்பதால் பயனில்லை. இதர காங்கிரஸ் பக்தர்களுக்கும், மைனாரிட்டி சமூகங்களுக்கும் கமிட்டியில் அதிகப் பிரதிநிதித்வம் கொடுக்க வேண்டியது அவசியம். முஸ்லிம்களுக்குக் காங்கிரஸ்மீது அபிமானம் இல்லையென்று ஜின்னா கூறுகிறார் ஹரிஜனங்கள் காங்கிரசை ஆதரிப்பதில்லையென்று, எம். சி. ராஜா முதலியோர் கூறுகிறார்கள். மைனாரிட்டி சமூகங்கள். காங்கிரஸை நம்பினால் மோசந்தான் எனப் பன்னீர் செல்வம் கோஷ்டியார் உறுமுகிறார்கள் ஆகவே, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் சகல மைனாரிட்டி சமூகங்களுக்கும் போதிய பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டியது அவசியமாகும். முஸ்லிம்களையும், ஹரிஜனங்களையும் மட்டும், மைனாரிட்டி சமூகங்களாக சில தலைவர்கள் கருதுகின்றனர். கிறிஸ்துவர்களையும், இதர சிறு சமூகங்களையும் அடியோடு மறந்து விடுகிறார்கள். இது வஞ்சகமல்லவா? காங்கிரஸை சதா எதிர்த்துக்கொண்டிருந்தால் தான் தலைவர்களுக்குப் புத்தி வரும் போலும்! கிறிஸ்துவர் அப்பாவிகள் தான்; காங்கிரஸை நம்பி, காங்கிரஸ் மைனாரிட்டிகள் உரிமைகளைப் பாதுகாக்குமென்ற உறுதியுடன் அவர்கள் ஒதுங்கியிருப்பதால் தலைவர்கள் அடியோடு அந்தச் சமூகத்தை மறந்துவிடுகிறார்கள். மைனாரிட்டி சமூகங்கள் எல்லாவற்றின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டியது காங்கிரஸ் கடமை. தலைவர்கள் இனிமேலாவது பராபட்சமின்றி நடந்துகொள்ளுவார்களாக.

புத்தி வந்தது!

இந்தியர் விரும்பினாலுஞ் சரி, விரும்பாது போனாலுஞ் சரி, பெடரேஷனை வலு கட்டாயமாக இந்தியர் தலையில் கட்டிவிட வேண்டுமெனப் பிரிட்டிஷார் நினைத்தார்கள். ஆனால், கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டதுபோல் அந்த பெடரேஷனுக்கு எங்கும் எதிர்ப்பு அதிகரித்துவிட்டது. பெடரேஷனை எதிர்க்காத கட்சியோ, சமூகமே இல்லையென்றே சொல்லலாம். ஆகவே, பிரிட்டிஷார் பெடரேஷனை அமுலுக்குக் கொண்டுவருவதை தள்ளி வைத்துக்கொண்டே போகிறார்கள். பெடரேஷன் சீக்கிரம் அமுலுக்கு வரப் போவதுமில்லை. அதை அமுலுக்குக் கொண்டுவரவும் முடியாது. இந்த உண்மையை லார்டு மேஸ்டன் போன்றவர்கள் இப்பொழுதுதான் உணர ஆரம்பித்திருக்கிறார்கள் மேஸ்டன் பிரபு லண்டன் கூட்டமொன்றில் பகிரங்கமாக இதைக் கூறியிருக்கிறார். இவ்வளவு காலத்திற்கப்புறமாவது பிரிட்டிஷாருக்குப் புத்தி வந்தது பாராட்டத் தக்கதுதான். இந்தியர் எதிர்ப்பை, வெள்ளையர் இப்பொழுதான் உணர ஆரம்பித்திருக்கிறார்கள் இந்தியா சுயராஜ்யத்துக்கு 'லாயக்கில்லை'யென்று வெள்ளையர் அடிக்கடி நாக்கில் நரம்பில்லாமல் கூறி வந்திருக்கிறார்கள்; அந்த நாக்கு இனி மேல் அப்படிக் கூறத் துணியுமா? ஒருபோதும் துணியாதென்றே நினைக்கிறோம்.

வாயில்லாப் பூச்சிகளா?

தாழ்த்தப்பட்ட மக்களை வாயில்லாப் பூச்சிகளென சில தலைவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள்கூட அவ்வாறு கருதி, தாழ்த்தப்பட்ட மக்களை அவர்கள் இஷ்டம் போல் ஆட்டி வைத்துக்கொண்டிருப்பது பரிதாபகரமானது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்றுபட வேண்டும்; அவர்களுக்குள் பிரிவினையே கூடாது. ஒன்றுபட்டால் தான் அவர்கள் வாழமுடியும்; இன்றேல், அவர்கள் வீழ்ச்சி நிச்சயம். அவர்கள் முன்னேற முடியாது. தாழ்த்தப்பட்டவர்களின் ஒரு பிரிவினர் ஜஸ்டிஸ் மகாநாட்டுப் பந்தலில் ஒரு மகாநாடு நடத்தினர். அதைத் தாழ்த்தப்பட்ட மக்களின் மகாநாடென்று கூற முடியாது சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவு தேட, அவர்கள் முயற்சியால் கூட்டப்பட்ட ஒருசிறு மகாநாடென்றேகூறலாம். மகாநாட்டுக்குத்தலைமைவகித்தவர், தாழ்த்தப்பட்டமக்களின் குறைகளை நன்கு எடுத்துக் கூறினர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தக் குறைகளிருப்பது மெய். ஆனால், அக் குறைகளைப் போக்குவது எப்படி? பிரிந்து பிரிந்து தனித் தனி மகாநாடுகள் நடத்துவதால் அந்தக் குறைகளைப் போக்கிவிட முடியுமா? முடியவே முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்டு அவர்களுக்கிருக்கும் குறைகளைப் போக்க முன்வர வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரிகள் பார்ப்பனரென்ற தவறுதலான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். பார்ப்பனர் மட்டும் எதிரிகளல்ல; வைதீக மூண்டங்கள் எல்லோரும் தாழ்த்தப்பட்ட ஏழை மக்களின் எதிரிகள் தான். ஒரு சமூகத்துக்கு மற்றொரு சமூகம் பார்ப்பன சமூகந்தான். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள் சகல சமூகங்களின் கொடுமைகளிலிருந்தும் விடுதலையடைய வேண்டும். விடுதலைக்கு அது ஒன்றுதான் சரியான வழி. சுயமரியாதைக்காரரையோ, அல்லது, ஜஸ்டிஸ் கட்சியினரையோ நம்புவதால் விடுதலையடைந்துவிட முடியாது. அதே கட்சியினர் தாழ்த்தப்பட்ட மக்களை எவ்வாறு நடத்தி வந்திருக்கிறார்களென்பது எல்லோரும் அறிந்த விஷயம். மகாநாட்டுக்குத் தலைமை வகித்தவரே அதை நன்கறிவர். ஆகவே, சகல சமூகங்களின் கொடுமைகளையும் உதறித் தள்ளத் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் ஒன்றுபடுவார்களாக. மண் குதிரைகளை நம்பி மோசம் போக வேண்டாம்!

அடுத்த ராஷ்ட்ரபதி

அகில இந்திய காங்கிரசுக்கு அடுத்த தலைவர் யாரென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. என்றாலும், அடுத்த தலைவர் பதவி அநேகமாக மௌலானா அபுல்கலாம் அஸாத்துக்குக் கிடைக்கலாமென்ற நம்பிக்கை இருந்து வருகிறது மௌலானா அஸாத்துக்கு அந்தப் பதவி கிடைக்குமேயானால், அப் பதவிக்கு அவர் முற்றிலும் பொருத்தமானவரென்பதில் சந்தேகமில்லை. மௌலானா சிறந்த அறிவாளி; ஒரு பெரிய முஸ்லிம் தலைவர். இதற்கு முன்னும் அவர் காங்கிரசுக்குத் தலைமை வகித்திருக்கிறார். ஆகவே, காங்கிரஸ் நிர்வாகத்திலும், அரசியலிலும் அவருக்கு நல்ல அனுபவமுண்டு. உண்மைத் தியாகி. இந்திய விடுதலையில் மிகுந்த ஆர்வமுடையவர். வகுப்பு வாத குறுகிய நோக்கமே அவரிடம் கிடையாது. முஸ்லிம்களுக்குக் காங்கிரஸில் செல்வாக்கில்லை; முஸ்லிம்கள் காங்கிரஸை ஆதரிக்கவில்லையென்று லீக்கார் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவதைப் பொய்ப்பிக்க மௌலானா அபுல்கலாம் அஸாத்தை அடுத்தக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுப்பதே நலம். மேலும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு அது ஒரு நல்ல வழி காட்டியது போலாகும்.

மந்திரி மறைந்தார்

சென்னைக் காங்கிரஸ் மந்திரிகளில் ஒருவரான ராமன் மேனன் காலஞ்சென்றதை அறிந்து வருந்துகிறோம். ராமன் மேனன், கோர்ட்,

(அடுத்த பக்கம் பார்க்க)

மணியோசை

ராஜகோபாலாச்சாரியார்,
சென்னை.

முதன் மந்திரியே,

ராஜபாளையம் தமிழ் மாகாண மகாநாட்டை நீங்கள் ஆரம்பித்து வைத்துப் பேசியதைக் கவனித்தேன். ஜாதிப் பூசலைக் கிண்டி விடும் சுயமரியாதை, ஜஸ்டிஸ்காரருக்கு நீங்கள் கொடுத்த சவுக்கடி சரியானதுதான். ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதை விட்டுக்கொடுக்க மறுத்து, உறுதியுடன் நடந்துகொண்டதையும் பாராட்டுகிறேன் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்காமல் நீங்கள் விட்டுக் கொடுத்திருப்பீர்களேயானால், தமிழருக்கு நீங்கள் பெரிய தீங்கிழைத்தவர்களாவீர்களென்பது திண்ணம். ஏனெனில், பிற்காலத்தில் தமிழ் இளைஞர்கள் உங்களைச் சபிக்க நேரிடும். அந்தச் சாபத்திலிருந்து நீங்கள் தப்பித்துக்கொண்டது உங்கள் நல்ல காலந்தான் ஹிந்தியில் இவ்வளவு உறுதியுடனிருக்கும் நீங்கள், காலிகளின் கொட்டத்தை அடக்க ஏன் தைரியமாக முன்வர மறுக்கிறீர்கள். காலிகளின் அட்டூழியம் வர வர அதிகரித்துக் கொண்டு போகிறது. சென்னையிலும், திருச்சியிலும் சு. ம. காலிகள் காங்கிரஸ்காரர்களை ஜாதிபேதமின்றித் தாக்கி வருவதை அறிந்திருப்பீர்கள். அறிந்திருந்தும் இன்னமும் அஹிம்சா தர்மம் பேசுவதின் அர்த்தமென்ன? சு. ம. காலிகளுக்கு நீங்கள் பயந்திருப்பதாக எண்ணி, அவர்கள் இன்னமும் அதிக அட்டூழியத்தில் இறங்கி வருகிறார்கள். அவர்கள் காலித்தனத்தை அடக்க உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவீர்களென்று நம்புகிறேன் இன்றேல், தமிழருக்கு ஆபத்து; தமிழ் நாட்டுக்கும் ஆபத்து; இறுதியாக உங்கள் ஆட்சிக்கும் பெரும் ஆபத்து வந்து சூழ்ந்து நிற்குமென்பது ஞாபகமிருக்கட்டும்.

டிக்—டாக்

எஸ். சீனிவாச அய்யங்கார்,
சென்னை

பழந் தலைவரே!

வருக; நெடுங்காலத்துக்குப்பின் நீங்கள் மீண்டும் காங்கிரஸ் சேவை செய்ய முன்வந்ததற்கு உங்களைப் பாராட்டுகிறேன் மனமார வரவேற்கிறேன். நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் சேவை தேசத்துக்கு விசேஷமாகத் தமிழ்நாட்டுக்கு மிகமிக அத்யாவசியமென்பதை யாரும் மறுக்க முடியாது. சென்னைக் கடற்கரையில் கூடிய பெடரேஷன் எதிர்ப்புக் கூட்டத்தில் நீங்கள் பெடரேஷனை எதிர்த்துப் பேசியதை அப்படியே எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவார்களென்பதில் சந்தேகமில்லை. உங்கள் பிரசங்கத்தின் முடிவில், ஹிந்தி எதிர்ப்பைக் வெறும் காரணமாகக் காட்டி, ஜாதி துவேஷத்தை மூட்டிவிடும் சு. ம. ஜஸ்டிஸ்காரரை நீங்கள் கண்டித்தது வரவேற்கத் தகுந்ததேயாகும். 'ஆரியர் தமிழர்'' என்ற பேதம் வேண்டாம். எல்லோரும் தமிழர் எல்லோரும் இந்தியமக்கள் 'நீங்கள் ஆரியனென்றால், நானும் ஆரியன், நீங்கள் திராவிடர் என்றால் நானும் திராவிடனே!'' என்று நீங்கள் கூறியது முற்றிலுஞ் சரி. ஜாதித் துவேஷத்தை மூட்டிவிடும் சுயமரியாதை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் அந்தக் கெடுதல் வேலையில் இறங்க வேண்டாமெனக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டீர்கள். ஜாதித்துவேஷத்தை விதைத்து வரும் பிற்போக்கர்கள் உங்கள் பேச்சைக் கண்டு இறுமாப்புக் கொள்ளலாம், எளனஞ் செய்யலாம் ஆனால், உங்கள் வேண்டுகோள் நீதியானதென்பதை அவர்கள் மறுக்க முடியாது. அது நியாயமானதென்பதை அவர்கள் நெஞ்சமே வற்புறுத்தும்; உங்கள் வேண்டுகோளுக்கு அவர்கள் செவி சாய்த்து, இனிமேலாவது அவர்கள் செய்துவரும் சாத்தான் வேலையைக் கைவிடுவார்களாக.

டிக்—டாக்

சு. ம. தாய்மார்கள்,
சென்னை.

தாய்மார்களே,

ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டிலும் வேலூர் மகாநாட்டிலும் காங்கிரஸ் பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்கவேண்டுமென நீங்கள் மும்முரமாக வேலை செய்ததாகக் கேள்விப்பட்டேன் நீங்கள் பகிஷ்கரிக்க நினைக்கும் பத்திரிகைகளில் "தமிழ் மணியும்" ஒன்று என்பது எனக்குத் தெரியும். 'தமிழ் மணி'' யை நீங்கள் தாராளமாகப் பகிஷ்கரிக்கலாம். அதற்காகத் தமிழ்மணி அதின் கொள்கையை விட்டுக்கொடுக்காது. வாரமொன்றுக்கு 15000 கணக்கில் வெளிவரும் தமிழ்மணி, வாரமொன்றுக்கு 15 பிரதிகளாக வெளிவந்தாலுஞ் சரிதான்; அதற்காக உண்மையை மறைத்து ஒருபோதும் வெளி வராது. உள்ளதை உள்ளபடி கூறியே தீரும். எவர் தயவு தாட்சண்யத்தையோ, எதிர்ப்பையோ தமிழ்மணி பொருட்படுத்தப் போவதில்லை. ஆனால், சு. ம. தாய்மார்களாகிய உங்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன் பொது ஜன சேவையில் ஈடுபட விரும்பும் ஒவ்வொரு தாய்மாரும், பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்பதே எனது வேண்டுகோள்: அவரவர் கொள்கைப்படி நடக்க எல்லோருக்கும் உரிமையுண்டு. அந்த உரிமையை நசுக்கவோ, மறுக்கவோ ஆண்டவனாலும் முடியாது. ஆனால், நீதியை அநீதியாகவோ, அறத்தை மறமாகவோ திருத்திக் கூறுவது நேர்மையாகாது சு. ம. தாய்மார்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். அவர்கள் மனச்சாட்சியைத் தட்டிக் கேட்கட்டும். அவர்கள் மனம் உள்ளதைக் கூறும். மனிதரை யாரும் ஏமாற்றிவிடலாம். ஆனால், எங்கும் நிறைந்த ஆண்டவனை ஏமாற்றிவிட முடியாது. "தமிழ் மணி'' கூறி வருவது சரியா, தப்பா என்பதைத் தாய்மார்களாகிய உங்கள் ஒவ்வொருவர் மனமும் தெளிவாக எடுத்துக் கூறும். உங்கள் மனச்சாட்சிக்குச் செவி சாய்க்கும்படி தாய்மார் எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

டிக்—டாக்

சர். எ. டி பன்னீர்செல்வம்,
சென்னை.

சு. ம. கிறிஸ்துவரே!

ஜஸ்டிஸ் கட்சிக்கு நீங்கள் தலைவரல்ல; இமிடேஷன் தலைவர்! என்றாலும், அந்த மகாநாட்டின் ஆரம்பத்திலும், முடிவிலும் நீங்கள் பேசியதைப் பார்த்தால், நிதான புத்தியுடன் பேசியதாகத் தெரியவில்லை. தேசத்துக்காக ஏதோ பிரமாதமான தியாகஞ் செய்த பெரிய வீராதி வீரனைப்போல் பேசியிருக்கிறீர்கள். தேசத்துக்கு நீங்கள் செய்த தியாகந்தான் என்ன? விரலை மடக்க முடியுமா? தேசத்தைக் காட்டி, பதவி பெற்றுப் பண திரட்டியதுதான் நீங்கள் செய்த பெரிய தியாகம்! அப்பேர்ப்பட்ட நீங்கள் காங்கிரஸையும் காங்கிரஸ் தலைவர்களையும் கண்டிக்கப் புறப்படுவது மானக்கேடல்லவா? மௌண்ட்ரோடிலுள்ள லார்டு வில்லிங்டன் சிலையை அகற்றும்படி சென்னை ஜில்லா காங்கிரஸ் அரசியல் மகா நாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தை நீங்கள் பலமாகக் கண்டித்திருக்கிறீர்கள். லார்டு வில்லிங்டன் உங்கள் சகபாடியாக இருக்கலாம்; உங்களுக்கு அநேக அநுகூலங்கள் தேடிக் கொடுத்தவராக இருக்கலாம் அதற்காக அவர் சிலையை உங்கள் வீட்டில் வைத்துக் கும்பிடுங்கள்; யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால், பொதுரோடில் அந்தச் சிலை இருப்பதைப் பொது மக்கள் வெறுப்பார்களேயானால், அதைக் கண்டிப்பாக எடுத்தே தீரவேண்டும். நீலன் சிலையை அகற்றவில்லையா ஏன்? நீலன் செய்த கொடுமைகள்தான் அதற்குக் காரணம். நீலனுக்கு, வில்லிங்டன் சப்பட்டையல்ல! காங்கிரஸை நசுக்க அவர் கைக்கொண்ட அடக்கு முறைகள் கொஞ்சமா? அப்பேர்ப்பட்ட வில்லிங்டன் சிலைமீது காங்கிரஸ்காரருக்கு வெறுப்பு ஏற்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அதில் நீங்கள் துருக்கிடுவானேன்? வில்லிங்டன் பிரபு உங்களுக்கு அருமையானவரேன்றால், நீங்களல்ல, உங்கள் கட்சிக்காரர் எல்லோரும் அவரவர் வீடுகளில் வில்லிங்டன் சிலையை வைத்துப், பூவும், தண்ணீரும் தெளித்துப் பூஜை செய்து வாருங்கள். யாரும் தட்டிக் கேட்கமாட்டார்கள். உங்கள் வீடுகளிலுள்ள சிலைகளைக் காங்கிரஸ்காரர் தூக்கிக் கொண்டுபோய்விடவும் மாட்டார்கள்! உங்கள் ராஜபக்தியைத் தாராளமாக அந்த முறையில் காட்டிக் கொள்ளலாம். அதற்குத் தடையே இருக்காது.

டிக்—டாக்

எம் தாமோதரம் நாயுடு காரு,
சென்னை.

ஜஸ்டிஸ் புலியே!

ஹிந்தி எதிர்ப்புப் புலிகள் கோஷ்டியில் நீங்கள் ஒரு வீரப் புலி! ஆனால், இரண்டு வருடங்களுக்குமுன் சென்னைக் கார்ப்பொரேஷனில் நீங்களே ஹிந்தியை ஆதரித்துத் தீவிரமாகப் பேசியிருக்கிறீர்கள், ஹிந்தி அவசிய மென்பதையும், சென்னைக் கார்ப்பொரேஷன், கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கினால், அது காங்கிரஸ் சர்க்கார் கைகளைப் பலப் படுத்தியது போலாவதோடு, சர்க்காருக்கு ஏற்படும் சிரமத்தை இலகு வாக்கியது போலாகுமென்றும் கூறியிருக்கிறீர்கள். ஹிந்தி ஒன்றே இந்தியாவின் பொதுப் பாஷையாக இருக்க லாயக் குடையது. ஆகவே, இதர மாகாணங்களுக்குச் சென்னை பின் வாங்காமல், உடனே ஹிந்தியைக் கட்டாயப் பாடமாகக் கார்ப்பொரேஷன் பள்ளிக் கூடங்களில் கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று அழுத்தந் திருத்தமாக பேசியிருக்கிறீர்கள், ஹிந்தியை அவ்வளவு தூரத்தில் ஆதரித்த புலி, இப்பொழுது அதை எதிர்ப்பதென்றால் விபரீதமல்லவா? ஆம் கலிகால அதிசயமென்றுகூடச் சொல்லலாம்! கார்ப்பொரேஷனில் நீங்கள் ஹிந்தியை ஆதரித்துப் பேசியது உங்களுக்கு ஞாபகமில்லையென்றால், பகிரங்கமாகச் சொல்லுங்கள். உங்கள் பிரசங்கத்தை ஆங்கிலத்தில் அப்படியே எழுதித்தரத் தயாராக இருக்கிறேன். மறந்துவிட வேண்டாம்;

டிக்—டாக்

சி. பாசுதேவ்,
சென்னை.

சு. ம. புலியே!

ஹிந்தியை எதிர்க்கும் சு. ம. வீரசூரர்களில் நீங்கள் ஒருவர். ஆனால், நீங்களும் கார்ப்பொரேஷனில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கவேண்டுமென்று வற்புறுத்திப் பேசியிருக்கிறீர்கள். "வட இந்தியாவில் பல நகரங்களுக்கு நான் சென்றிருக்கிறேன். ஹிந்தியின் அவசியத்தை அப்பொழுதுதான் நான் நன்கு உணர்ந்தேன் ஹிந்தி தெரியாத தென்னாட்டினர், வடநாட்டில் அதிகக் கஷ்டப்பட நேரிடுகிறது. ஹிந்தி தெரியாததால் யாத்திரைக்குப் பல முட்டுக்கட்டைகள் ஏற்படுகின்றன. இந்தியா ஒரு தேசமாக விளங்குவதற்கு ஒரு பொதுப் பாஷை அவசியமாகும். ஆகவே, நியாய புத்தியுள்ள எல்லோரும் ஹிந்தியைக் கட்டாயம் ஆதரித்தே தீருவார்கள்'' என்று ஜோராகப் பேசிய நீங்கள், இன்று ஹிந்தியை "லம்பாடி'' பாஷை என்று கூறுகிறீர்கள் உங்கள் நியாய புத்தி எங்கே? இது காலத்தின் கோலமா, அல்லது உங்கள் புத்தியின் விபரீதப் போக்கா? நான் மேலே கூறிய வாசகங்கள் உங்கள் வாயிலிருந்து வந்தவை. அதை இல்லையென்று மறுக்க உங்களுக்குத் தைரியமுண்டா? தைரியமிருந்தால் பகிரங்கமாக மறுக்க முன்வாருங்கள் பார்ப்போம். கார்ப்பொரேஷனில் நீங்கள் பேசிய வார்த்தைகளை அப்படியே உங்களுக்கு எழுதிக்கொடுக்கத் தயார். இது கட்டுக் கதையல்ல; புளுகுமல்ல; முற்றிலும் உண்மை.

டிக்—டாக்

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

சிறை மந்திரியாக இருந்தார். அவருக்கு வயது 42 தான். இளம் வயதேயாயினும், அவருடைய பொறுப்பை உணர்ந்து, கோர்ட், சிறை நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வந்தார். இரவு பகலாக ஓய்வின்றி உழைத்து வந்ததின் பயனாக நோய்வாய்ப்பட்டு, அதிசீக்கிரத்தில் காலமானார். மந்திரி மேனன் பெருந்தியாகி; சட்டமறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு இருமுறை சிறைசென்றார். மலையாள மக்கள் விழிப்படைந்து, காங்கிரஸை ஆதரிக்க இவர் ஒரு காரணமாயிருந்தாரென்பதில் சந்தேகமில்லை. அவரிடம் குறுகிய நோக்கமே கிடையாது பரந்த நோக்கமுடையவர். நல்ல வாக்கு சாதுர்யம் நிறைந்தவர் யாரிடமும் அன்பாக நடந்துகொள்ளும் உத்தம குணம் படைத்தவர். இப்பேர்ப்பட்ட ஒரு உத்தமரை இவ்வளவு சீக்கிரத்தில் எமன் அழைத்துக்கொண்டு போவானென யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது. ராமன் மேனன் மறைந்துவிட்டார். இந்திய மாதா ஒரு தவப்புதல்வரை இழந்துவிட்டாள். என்றாலும், அவருடைய அன்பின் சொரூபத்தை இந்திய மக்கள் என்றும் மறக்க முடியாது. அவர் புகழுடம்பு இந்தியாவில் என்றும் நிலைநிற்கும். அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஜாவுத்ஷா, பி. ஏ.
"தாருல் இஸ்லாம்",
சென்னை.

ஆசிரிய திலகமே!

சலாம்; நீங்கள் காங்கிரசிலிருந்து திடீரெனப் பல்டியடித்து லீகில் சேர்ந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆனல், காங்கிரசின் உதவியால் நீங்கள் பெற்ற சென்னைக் கார்ப்பொரேஷன் ஆல்டர்மன் பதவியை இன்னமும் ராஜிநாமாச் செய்யவில்லை அது ஏன்? அதற்கு ஏதேனும் சொந்தக் காரணமிருக்கும்! அதை நான் கிளறி விடுவேனேன்! என்ன காரணமிருந்தபோதிலுஞ் சரி, அந்தப் பதவியை ராஜிநாமா செய்யாதது முறையற்ற செயல் கௌரவமான ஆசிரியர் பதவியிலிருக்கும் உங்களுக்கு அது அழகல்ல; அடுக்கவும், அடுக்காது. அது எப்படியோ போகட்டும்; லீகில் சேர்ந்திருக்கும் உங்களுக்கு ஜஸ்டிஸ்-சுயமரியாதை மகாநாட்டில் என்ன வேலை? ஆமாம், மறந்துவிட்டேன். நீங்கள் கலிபுல்லா ராவுத்தர் கோஷ்டியைச் சார்ந்தவர் என்பது எனக்கு இப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. சு. ம. மகாநாட்டுக்குப் போனீர்களே, அங்கேயாவது சும்மா இருக்கக் கூடாதா? காங்கிரஸ் வண்டவாளங்களை அடுக்கடுக்காக எடுத்துவிடப் போவதாக ஜம்பம் பேசினீர்கள். உங்கள் வண்டவாளமும் அதில் சேர்ந்து வருமா? பொறுத்துப் பார்ப்போம். கம்பளியெனக் கரடியைத் தூக்கிய மாதிரி, காங்கிரஸ்காரர் உங்களைத் தூக்கக் கார்ப்பொரேஷனுக்கு அனுப்பினார்கள். காங்கிரஸ் பதவிகளிலும் வைத்தார்கள். ஆனால் நீங்கள் சரியான கரடி என்பதை அவர்கள் அறியவில்லை. இப்பொழுது மட்டுமல்ல ஆதிமுதல் நீங்கள் கரடிதான்! அக்காலத்தில் காங்கிரசையும், காந்திஜியையும் திட்டி வசை பாடியவர்களுள் நீங்கள் முதல் நம்பர். உங்களுக்கே முதல் தாம்பூலம் கொடுக்கலாம்: அப்படி இருந்தும் நீங்கள் காங்கிரசில் சேர்ந்தீர்கள். உங்களை காங்கிரசில் சேர்த்துக்கொண்டார்கள். இன்று நீங்கள் கரடியென்பதைக் காட்டிவிட்டீர்கள். காங்கிரசிலிருந்து, லீகுக்கு ஒரே பாய்ச்சல். இன்னமும் எத்தனை பாய்ச்சலோ யாருக்குத் தெரியும்? எப்படியோ உங்கள் பிழைப்பு நடந்தால் சரிதான்; எனக்கும் சந்தோஷந்தான்!

டிங்—டாங்

மௌலானு ஜபார் அலிகான்,
பாடலிபுரம்

லீக் அம்சமே!

பாடலிபுரத்தில் கூடிய அகில இந்திய முஸ்லிம் மாணவர்கள் மகா நாட்டில் நீங்கள் பேசியது என்னைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. "இந்தியா பூராவும் ஒரே சமுதாயம் என்ற தவறன எண்ணந்தான், முஸ்லிம்களுக்கும், ஹிந்துக்களுக்கும் முரண் ஏற்படக் காரணம்!...மகாத்மா காந்தி மெக்காவிலுள்ள காபாவை நோக்கி வணங்கினல் வகுப்பு ஒற்றுமை ஏற்படுவதற்கு அவை உதவியாக இருக்கும்!" என்று பேசியிருக்கிறீர்கள். இந்தப் பேச்சு யாரைத்தான் திடுக்கிடச் செய்யாது? இந்தியா முழுவதும் ஒரே சமுதாயம் என்பதில் சந்தேகமென்ன? இந்தியாவிலுள்ள, ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர், சீக்கியர் எல்லோரும் சகோதரர்கள், எல்லோரும் ஒரே சமுதாயமாகவே இருக்கவேண்டும். மதப் பாகுபாடுகள் இருந்தால் என்ன? ஒரே சமுதாயம் என்ற உணர்ச்சிதான் வேண்டும். அதுவே, வகுப்பு ஒற்றுமை ஏற்படுத்தப் போதுமானது. மகாத்மாக் காபாவை நோக்கித் தொழுதாலென்ன, தொழாது போனலென்ன? வகுப்பு ஒற்றுமைக்கு அது பிரதானமல்ல. இந்திய மக்கள் எல்லோரும் ஒரே சமுதாயம், எல்லோரும் இந்திய மக்கள் என்ற உணர்ச்சி தான் வேண்டும். அதை மறந்து, நீங்கள் முஸ்லிம் மாணவர்களிடம் பேசியிருக்கும் அர்த்தமற்ற பேச்சை எந்த உண்மை முஸ்லிமும் கண்டிக்கத் தயங்கமாட்டார். உங்கள் பேச்சு நிதான புத்தியுடன் பேசியதல்ல; வகுப்புவாத வெறியால் வந்த பேச்சென்றே நினைக்கிறேன், இவ்வித வகுப்பு வெறியும், துவேஷமும்தான் ஆபத்தானது. அதிலும் இளம் மாணவர் உள்ளத்தில் இவ்வித துவேஷத்தை விதைப்பது பெரிய பாவம்; மன்னிக்க முடியாத குற்றமென்றே சொல்ல வேண்டும்.

டிங்—டாங

காலண்டர்கள்

கீழ்கண்ட கம்பெனிகளிடமிருந்து அழகான காலண்டர்கள் வரப்பெற்றோம்.

தோமாஸ் ரொட்ரீகோ ஃ சன்ஸ்,
165, பிராட்வே, ஜி. டி. மதராஸ்.

M. S. மணியம் ஃ கம்பெனி,
நெ. 1, மலையப்பெருமாள் தெரு,
ஜி டி மதராஸ்

பான்மல் சாவர்க்கார்,
121, தங்கசாலை தெரு,
ஜி. டி மதராஸ்.

V. A. வேதபபா ஃ கம்பெனி,
251, தம்புச்செட்டி தெரு,
ஜி டி. மதராஸ்.

கலகக்காரர் தீவிரம்

உயிர்கள் நாசம்

ஸ்பெயினில் கலகக்காரர் தீவிரமாக முன்னேறி வருகின்றனர். கடலோனியாவின் வடக்கிலும், வெலன்ஷியா முனையிலுங்கூட இப்பொழுது தீவிரமாகப் போராட்டம் நடந்து வருகிறது. மேற்கூறிய இடங்களைக் கலகக்காரர் பிடித்துவிட்டதாகக் கலகச் செய்தி கூறுகிறது. ஆனல் சர்க்கார் தாங்கள் ஜெயித்துவிட்டதாகக் கூறுகிறார்கள் வடக்கே குளிராலும், பனியினலும் முன்னேற முடியாமல் கலகக்காரர் தவிக்கின்றனர். தெற்கே லெரிடா முனையில் பெருத்த நஷ்டத்துடன் கலகக்காரர் முறியடிக்கப்பட்டனர். இங்குள்ள முக்கியமான ராணுவ வசதியுள்ள இடங்கள் சர்க்காரிடமே இருப்பதாகச் சர்க்கார் செய்தி கூறுகிறது.

பார்ஸிலோனு

கலகக்காரர் பார்ஸிலோனுவிலிருந்து இன்னமும் 68 மைல் தூரமே இருக்கிறார்கள். என்றாலும், சர்க்கார் கலகக்காரரை எதிர்க்கத் துணிவுகொண்டிருக்கிறார்கள் இங்குள்ள மலைப்பிரதேசங்களிலுள்ள சர்க்காரின் அரண்கள் உறுதியாகவே இருக்கின்றன. கலகக்காரர் எளிதில் அவைகளைப் பிடித்துவிட முடியாது ஸலமான்காவில் கலகக்காரருக்குப் பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது அங்கு சர்க்காருக்கு நஷ்டம் சுமார் 2470 சர்க்கார் துருப்புகளைக் கலகக்காரர் கைது செய்திருக்கிறார்கள். நான்கு வீடுகளுக்குக் கலகக்காரர் வேட்டு வைத்துத் தகர்த்தனர். அந்த வீடுகளிலுள்ள, குழந்தைகள் பெண்கள் எல்லோரும் மாண்டனர். காஸ்டெலான் முனையில் சர்க்காருக்கு வெற்றி அங்கு சுமார் 2000 கலகக்காரர் மாண்டனர். ஒரு இதாலிய ராணுவத்தைச் சர்க்கார் ராணுவம் முறியடித்தது. சுமார் 60 யுத்த டாங்கிகளைக் கைப்பற்றினர் பல இதாலிய சோல்ஜர்களுக்குக் காயம் கலக்காரர் வெடிகுண்டு எறிவதை இன்னமும் நிறுத்தவில்லை ரயில்கள் மீதும், ஜனங்கள் குடியிருக்கும் வீடுகள் மீதும் வெடிகுண்டுகளை எறிந்தனர். இதனல் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதோடு, ஏராளமான சொத்துக்களும் நாசமாயின.

நோட்டீஸ்

சென்னை பழைய வண்ணாரப்பேட்டையைச்சார்ந்த நரசய்யதெரு 11வது வீட்டிலிருக்கு நல்லாததூர் முனுசாமி நாயக்கர் குமாரர் குலசேகர நாயக்கருக்கு டை பேட்டை நாராயணப்பி நாயக்கன் தெரு 6 வது நெம்பர் வீட்டிலிருக்கும் R புக்ரூஜ் சவுக்காருல் தெரியப்படுத்தும் நோட்டீஸ் என்னவென்றால், தாங்கள் 1933வது வருஷம் ஜூலைமீ 3வல் சென்னை கொருக்குப்பேட்டையைஅடுத்த கத்திவாக்கம் ஐராட்டில் கிழண்ட வாடையில், தங்களுக்கு சொந்தமான நிலத்தின் பத்திரம் எழுதிக் கொடுத்து கடனுக வாங்கிய ரூபாய் 150 நூற்று அம்பதும் நாளது வரையில் சேரவேண்டிய வட்டியும், முதலும் கொடுத்து 1939 வருஷம் ஜனவரிமீ 31க்குள் தங்களுடைய பத்திரம் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டியது. அப்படி வாங்க தவறினல் தாங்கள் எழுதிக் கொடுத்த அதிகாரப்படி ஏலம் போட்டு குறைவுபடும் பட்சத்தில் கோர்ட் சட்ட பிரகாரம் சகல செலவுடன் வசூல் செய்யப்படும் என்று இந்த விளம்பரம் மூலம் தெரியபடுத்துகிறேன்.

வண்ணாரப்பேட்டை, மதராஸ். (6 1-1939) — R. புக்ரூஜ் சவுக்கார்

டாட்ஜ்

நீங்கள் ஒரு டாட்ஜ் டிரக்கை வாங்கும்போது உலகிலேயே முன்னணியில் நிற்கும் நல்ல மதிப்புள்ள டிரக் ஒன்றை வாங்குகிறீர்களென்பது நிச்சயம்.

டாட்ஜ் டிரக்கை விலை கொடுத்து வாங்குவதால், நீங்கள் போட்ட பணத்தைப் பல வழிகளில் ஏராளமாகத் திரும்பப் பெறுகிறீர்கள். எந்தக் காலத்திலும், எந்த நிலைமையிலுஞ் சரி, ஒவ்வொரு மாடல் டாட்ஜும், அது தாங்கக்கூடிய அளவுக்கு அதிகமான பாரத்தை ஏற்றிச் செல்லக்கூடிய சக்தி பெற்றிருக்கிறது. இஞ்சினும், சேஸிஸும் நவீன முறையில் இலகுவாக அமைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், டிரக்குகள் பல வருடங்கள் உழைத்தபோதிலும், அவை கெட்டுப்போகாதபடி அவ்வளவு உறுதியாக அமைக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் தேய்ந்துபோகக்கூடியவையல்ல டாட்ஜ் டிரக்குகள் வாங்குவதால் அதிகச் செலவில்லை. ஆனல், நீடித்த காலம் நம்பிக்கையான உழைப்பைப் பெற்றுக்கொள்ளலாம். சகலவிதமான போக்குவரத்துக்களுக்கும் ஏற்ற மாடல் ஒன்றுண்டு.

அடிசன் அண்டு கம்பெனி, லிமிடெட்.,
சென்னை—கிளை ஆபீஸ்கள்.



DT-20

தமிழ் நாட்டுக்கு அதிகாரம் பெற்ற ஜில்லா டீலர்கள்,—
Ar. A. செண்பக நாடார், ஃ P. V. P. வாலசுப்பிரமணிய நாடார், மதுரை ஃ திருநெல்வேலி.
பழனியப்பா ஃ சன்ஸ், காரைக்குடி. தி மாடர்ன் மோட்டார் ஃ ஜெனரல் டிரேடிங் கம்பெனி, தஞ்சாவூர்.

சங்கநாதம்

கெட்டிக்காரன் புளுகு!

படிப்பது ராமாயணம், இடிப்பது?

குயிலைப் பழிக்கும் கூகை

ருத்ராட்சப் பூனைகள் வேஷம்

ஜஸ்டிஸ் வெடிகுண்டு!

(பூம்-பூம்)

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு!

எவ்வளவுதான் கெட்டிக்காரனாக இருந்தபோதிலும், புளுகை எத்தனை நாளைக்குத்தான் மறைத்து வைத்திருக்க முடியும்? எப்படியும் அது வெளிவந்துதான் தீரும். மலிந்தால் எல்லாம் சந்தைக்கு வந்துதானேயாகவேண்டும். சுயமரியாதை, ஜஸ்டிஸ்காரர் குட்டுகளெல்லாம் படிப்படியாகச் சந்தி சிரிக்க வெளி வந்துகொண்டிருக்கின்றன. நான் ஆதியிலேயே சொன்னேன். "தமிழுக்கு ஆபத்து; தமிழ் நாடுக்கு ஆபத்து!" என்பதெல்லாம் வெறும் பொய்க்கூச்சல்; அது தமிழரை ஏமாற்ற ஆரம்பித்த ஒரு "ஹம்பக்" கிளர்ச்சி சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சியார் நோக்கம் வேறு. காங்கிரஸை எதிர்க்கவும், காங்கிரஸ் மந்திரி சபையைக் கவிழ்க்கவும், மாண்டுபோன ஜஸ்டிஸ் கட்சிக்கு உயிர் கொடுக்கவுமே அவர்கள் இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள் பெயரளவில் ஹிந்தியைக் காட்டி எதிர்த்தார்கள். ஹிந்தி எதிர்ப்பைக் கட்டியழுதார்கள். தமிழ் நாடு தமிழருக்கே, என்று நீலிக் கண்ணீர் வடித்தார்கள்! தமிழ் நாடு எக்கேடு கெட்டாலும் அவர்களுக்குக் கவலை இல்லை. தமிழர் எல்லோரும் அழிந்தாலும், அல்லது, அவர்களை வங்காளக்குடாக் கடல் அடித்துக்கொண்டு போனாலும், அதற்காக இந்தத் "தமிழ் பக்தர்கள்" ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வடிக்கப் போவதில்லை. அவர்களுக்கு வேண்டியது பதவி; பணம். அவைகளைச் சேகரிக்க வழியாக இருப்பது ஜஸ்டிஸ் கட்சி. அந்தக் கட்சிக்கு எப்படியாவது உயிர் கொடுக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். தமிழ் நாடு எங்கும் பகிரதப் பிரசாரஞ்செய்தார்கள் ருத்ராட்சப் பூனை வேஷம் போட்டார்கள் தமிழ் நாட்டுக்கு ஆபத்து வந்துவிட்டதே யென்று ராமாயணம் படித்தார்கள். ஆனால், அவர்கள் இடித்ததோ பெருமாள் கோயில்! ஜஸ்டிஸ் கட்சிக்கு உயிர் கொடுக்கவும், மீண்டும் பதவி வேட்டை ஆடவுமே இந்த சதியில் இறங்கினார்கள்; இதுதான் ரகசியம்.

* * *

இந்த ரகசியத்தை சுயமரியாதை பத்திரிகை யொன்று கக்கி விட்டது. அந்தப் பத்திரிகை வேணுமென்று இந்த ரகசியத்தை விட்டுக் கொடுத்திருக்காது. அப்பத்திரிகை ஆசிரியர், அவரையும் அறியாமலேயே இந்த உண்மையைக் கக்கி விட்டாரென்றே நினைக்கிறேன். சென்னையில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மகா நாட்டைப்பற்றியும், அந்த மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைப்பற்றியும் எழுதிக் கொண்டு வந்தபோது, கை தவறி மனதிலுள்ள அந்தரங்கத்தை அந்தச் சு. ம. பத்திரிகை ஆசிரியர் எழுதிவிட்டார் போலும்! அது அச்சில் ஏறி வெளிவந்து விட்டது. "ஹிந்தி எதிர்ப்பு மூலம் ஜஸ்டிஸ் கட்சிக்கு எவ்வளவோ பேராதரவு கிடைத்தது. ஹிந்தி எதிர்ப்பில் சம்பந்தப்பட்டவர்களை யெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக் கொண்டு, அவர்களிடம் சந்தா வசூலித்தால் எவ்வளவோ பெருந் தொகை கிடைக்கும். அந்த வழியில் யாராவது முயற்சித்தார்களா?" என்று அந்த சு. ம. பத்திரிகை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு யோசனை கூறியிருக்கிறது. இப்போது தெரிந்ததா உண்மை? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்பதை தமிழர் இப்பொழுதாவது அறிந்திருப்பார்களென்று நம்புகிறேன். நான் இதுவரையில் கூறிவந்ததும் உண்மையாயிற்று

* * *

இது ஒருபுறம் இருக்கட்டும்; ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டின் போக்கைக் கவனிப்போம். இதைப்பற்றி ஏற்கனவே கூறியிருக்கிறேன். சுமார் 5000, 6000 பேர் கூடியிருந்த அந்தக் கூட்டத்தை சு. ம. பத்திரிகைகள் 50 ஆயிரம், 60 ஆயிரமென்று வர்ணிக்குமென்று ஜோசியம் கூறியிருந்தேன். அது உண்மையாயிற்று. 50 ஆயிரம் 60 ஆயிரமல்ல; சுமார் 75000 பேர் கூடியிருந்தார்களென்று அப்பத்திரிகைகள் படுபொய் சொல்லுகின்றன. அதை நான் ஏன் மறப்பானேன்? ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டுப் பந்தலையும், அப் பந்தலில் எத்தனை பேர் தங்கியிருக்கக் கூடுமென்பதையும் நேரில் கண்ட சென்னை மக்களுக்கு உண்மை தெரியும். அண்டப் புளுகு ஆகாயப் புளுகு கூறுவதில் பேர் பெற்ற சுயமரியாதைப் பத்திரிகைகளுக்குப் புளுகச் சொல்லிக்கொடுக்கவா வேண்டும்? மலை விழுங்கும் இந்த மகாதேவன்களுக்கு இந்த அண்டப் புளுகுகளெல்லாம் எம்மாத்திரம்? "ஹல்வா" சாப்பிட்ட மாதிரிதான்! இதற்கு எத்தனையோ உதாரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம். தூத்துக்குடியில் சுயமரியாதைக் காலிகள் செய்த அட்டூழியங்களை அடியோடு இல்லையென்று மறுக்கின்றனர் காங்கிரஸ்காரர் ஊர்வலங்கள் வந்தது மெய்தானாம்! ஆனால், அவர்கள் அங்கு வரக்கூடாதெனக் காலிகள் சாந்தமாகத் தடுத்தார்களாம். அவர்களைக் கண்டதும், காங்கிரஸ்காரர்கள் பயந்து விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்களாம்! ஓடிய வேகத்தில் ஒருவர்மீது ஒருவர் விழுந்து, காயமேற்பட்டதாம்! என்ன அருமையான புளுகு! இந்தப் பொய் கம்பர் ராமாயணத்தில்கூடக் கிடையாது இந்தப் புளுகை சுய அறிவுபடைத்த யாராவது நம்புவார்களா? சு. ம. போன்ற சுத்த மடையர்களும், அம்மாஞ்சிகளுந்தான் நம்புவார்கள். அறிவுபடைத்த எவரும் நம்பமாட்டார்கள். சாத்வீகமே உருவாகவந்த சு. ம. காலிகளைக்கண்டு காங்கிரஸ்காரர் ஓடநேரிட்டதென்றால், அந்த சுயமரியாதைக்காரர் என்ன பூதங்களா, பேய், பிசாசுகளா? ஒரு சில மனிதரைக் கண்டமாத்திரத்தில் ஒரு பெரும் கூட்டம் ஓடுவதென்றால் அது பெரிய விசித்திரந்தான்! சுயமரியாதைப் பத்திரிகைகள் புளுகுகளுக்கு இது ஒரு சிறு 'சாம்பில்' இதுபோன்ற பெரிய விசித்திரமான "சாம்பில்"கள் எத்தனையோ உண்டு.

* * *

காங்கிரஸ் மந்திரி சபைக்கு எதிர்ப்பு, காங்கிரசுக்குள்ளாகவே இருக்கிறதாம்! தொழிலாளர் எதிர்க்கிறார்களாம், காங்கிரஸ் அபேதவாதிகள், மூஸ்லிம்கள், கிறிஸ்துவர், ஹிந்து மகாசபை, தீண்டாதார் எல்லோரும் எதிர்க்கிறார்களாம்!! தமிழரும் பெரும்பான்மையாகக் காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்கின்றனராம்! காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்கும் காங்கிரஸ்காரர் யார்? மந்திரி சபையை யாரும் எதிர்க்கமாட்டார்கள். மந்திரிகள் செய்யும் ஒரு சில தவறுகளை எதிர்க்கலாம்; கிறிஸ்துவர் எதிர்ப்பதற்கு உதாரணம் கூற முடியுமா? சர். ஏ. டி. பன்னீர் செல்வம் சு. ம. கும்பலோடு சேர்ந்துகொண்டு கோவிந்தா போடுவதால், கிறிஸ்துவர் எல்லோரும் காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்கிறார்களென்று அர்த்தமா? சில சிவராஜ்களும், ராஜாக்களும், சுயநலம் காரணமாகக் காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்ப்பதால், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் எல்லோரும் காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்கிறார்களென்று அர்த்தமா? சென்னை சட்டசபையிலிருக்கும் 30 ஹரிஜன அங்கத்தினர்கள் ஏன் எதிர்க்கவில்லை? அவர்கள் எத்தனையோ ஆயிரம் ஹரிஜன மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். காங்கிரஸ் மந்திரி சபையைத் தமிழர் எல்லோரும் எதிர்ப்பதாகச் சுயமரியாதைப் பத்திரிகைகள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது சு. ம. தமிழர்தான், தமிழ் நாட்டிலுள்ள தமிழர்; ஏனைய $2\frac{1}{2}$ கோடித் தமிழரும் தமிழரல்ல வெறும் மரக் கட்டைகள் என்பது சு. ம. காரர் இதுமாப்பா? சு. ம. காரரின் பிறவிக் குணம் அது. அந்தக் குணம் போகவே போகாது. வாதத்துக்கு மருந்துண்டு; பிடிவாதத்துக்கு மருந்தேது?

* * *

சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சியினருக்கு ஏதேனும் குதர்க்கம் பண்ணிக்கொண்டேயிருக்க வேண்டும். இன்றேல், அவர்களால் சும்மா இருக்கமுடியாது. நாரதருக்குப் பொய் சொல்லாவிட்டால் வயிறு வெடித்து விடுமென்று சொல்லுவார்கள். சுயமரியாதைக்காரருக்கு ஏதேனும் குழப்பஞ் செய்து, காலித்தனத்தில் இறங்காவிட்டால் அவர்கள் மண்டை வெடித்து விடும் போலும்! ஜஸ்டிஸ் கட்சியாருக்குப் பதவியும், பணமும் வேண்டும்; பணமும் கொஞ்சமல்ல; ஆயிரம் ஆயிரமாக உருட்டி போட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அதற்கு மந்திரி பதவிகள்தான் லாயக்கு அந்த மந்திரி பதவிகள் போச்சே யென்று வாயிலும், வயிற்றிலும், அடித்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொள்ளவே இந்த ஆர்ப்பாட்டமெல்லாம். சுமார் 10 வருடங்களுக்கு முன் அதாவது, 1926ம் வருடத்தில் மந்திரி பதவிக்காக இதே ஜாதித் துவேஷத்தை மூட்டி விட்டார்கள். அவர்களுக்குப் பதவி கிடைத்ததும் கப்-சிப் பென்று வாயை மூடிக் கொண்டார்கள். இப்பொழுது மீண்டும் இந்த வகுப்புத் துவேஷத்தைக் கிளறிவிட ஆரம்பித்திருக்கிறார்கள். பார்ப்பனர், திராவிடர் ஜாதிப் பூசலைக் கிண்டி விட்டு, வேடிக்கைப் பார்க்கிறார்கள். இந்த ஜாதிப் பூசல் எவ்வளவு மோசமான முடிவில் கொண்டு போய் விடுமென்பதை அவர்கள் கொஞ்சமேனும் சிந்தித்துப் பார்க்கவே இல்லை. பார்ப்பனரைக் கொல்லவேண்டும்; வெருட்ட வேண்டுமென்றெல்லாம் பேசினார்கள்; பேசியும் வருகிறார்கள் ஆனால், ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் பேசிய சர். பன்னீர் செல்வம், பார்ப்பனரை வெருட்டவேண்டுமென்பது அவர்கள் நோக்கமில்லையென்று கூறினார். இது படு பொய் சர். பன்னீர் செல்வம் மண்டியிட்டு, எவர் பாதாரவிந்தங்களில் விழுந்து நமஸ்கரித்துப்

(அடுத்த பக்கம் பார்க்க)

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

பூமாலை சூட்டினாரோ, அதே பேர்வழி அதே தலைவர் ஈ. வெ. ராமசாமி நாய்க்கர், ராயபுரத்தில் கூடிய ஒரு சுயமரியாதைக் கூட்டத்தில் என்ன பேசினார்? பார்ப்பனரை வெருட்ட வேண்டும்; தமிழ் நாட்டில் அவர்களுக்கு இடமே இல்லையென்றார். பன்னீர் செல்வத்துக்குச் சந்தேகமிருந்தால் அந்தப் பிரசங்கத்தைப் புரட்டிப் பார்க்கட்டும் இன்றேல், அந்தப் பிரசங்கத்தின் விபரத்தைப் பன்னீர் செல்வத்துக்குக்காட்ட நான் தயாராக இருக்கிறேன். ராமசாமியார் மாத்திரமா அப்படிப் பேசினார்? இல்லை. சு. ம காரர் எல்லோருமே அப்படிப் பேசியிருக்கிறார்கள். அதைவிட மோசமாக பேசிவருகிறார்கள். பன்னீர் செல்வம் இந்த உண்மையை அறிவாரா, அல்லது, அறிந்தும் வேறுமென்று மறைக்கிறாரா?

* * *

சர். பன்னீர்செல்வம் பேர்போன ராஜ பக்தர்; அவர் ராஜ பக்தியெல்லாம் பதவியில்தான் அடங்கியிருக்கிறது. லண்டன் மகாநாட்டுக்குச் சென்ற அவர், கிறிஸ்துவர் உரிமையை வெள்ளையருக்கு அர்ப்பணஞ் செய்து மந்திரி பதவி வாக்குறுதியோடு திரும்பினார் ஜஸ்டிஸ் ஆட்சியில் உள்நாட்டு மந்திரியானார். இப்பொழுதும் பதவி கிடைப்பதாயிருந்தால் கிறிஸ்துவர் சமூகத்தை மட்டுமல்ல; தேசத்தையே காட்டிக்கொடுக்க அவர் தயார். அவர் இப்பொழுது செய்யும் ஆர்ப்பாட்டங்களெல்லாம் அதற்கு ஒரு வழி காட்டி. வேண்டுமானால், சர் பன்னீர் செல்வம் எங்கு போய் நிற்கப்போகிறாரென்பதைப் பொறுத்துப் பாருங்கள். அப்பொழுது நான் கூறுவது மெய்யா பொய்யா என்பது தெரியும். அவர் காங்கிரஸையும், காங்கிரஸ் மந்திரிகளையும் மும்முரமாகத் தாக்கி வருவதின் அந்தரங்கம் இதுதான்.

* * *

ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் கொஞ்சமல்ல; அனந்தம் எல்லாம் எடுச்சுரைக்காய்கள்தான். அவை கிரியாம்சையில் வரப்போவதே இல்லை இந்த ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு முடிந்ததோடு, சுயமரியாதைக்காரரையும், அவர்கள் எதிர்ப்பையும் மூட்டை கட்ட வேண்டியதுதான் சுயமரியாதைப் பத்திரிகைகள் வேண்டுமானால் எழுத்தளவில் எழுதிக்கொண்டிருக்கலாம். அந்தப் பிரசாரத்தையும் இப்பொழுதே ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் கட்சிக்கு ஏராளமாகப் பத்திரிகைகள் வேண்டுமாம்; காங்கிரஸ் பத்திரிகைகள் உண்மையைக் கூறாமல் புளுகி வருகின்றனவாம்! அம்மம்மா!! காங்கிரஸ் பத்திரிகைகள் புளுகுவதையெல்லாம் ஒன்றாகத் திரட்டினாலும் அவை சு. ம. பத்திரிகையின் ஒரு சிறு புளுகுக்கு ஈடாகுமா? அதற்குச் சாம்பில் ஒன்றை ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறேன் இன்னும் பல உதாரணங்களை எடுத்துக் காட்டுவது அனாவசியமென்று நினைக்கிறேன். அவர்கள் கட்சியைப் பிரசாரஞ் செய்ய தொண்டர்கள் ஏராளமாக வேண்டுமாம்! அடடா! தொண்டர்களுக்கா பஞ்சம்? காங்கிரஸை எதிர்க்கவும் காங்கிரஸ்மீது வசை பாடவும் காசு கொடுக்காமலேயே ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வரத் தயார்! அப்படியும் வராவிட்டால் நபருக்கு 2 அணா கொடுத்தால், காங்கிரஸையும், காங்கிரஸ் தலைவர்களையும், பத்திரிகைகளையும் வாயில் வந்தபடி, மிலேச்சத்தனமான பாஷையில் திட்டவும், காலித்தனஞ் செய்யவும் ஆயிரக்கணக்கானவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்லெறிவதற்கு ஆள் தேடுவது கஷ்டமல்ல கதவுகளையும் ஜன்னல்களையும் உடைப்பதற்குக் காலாடிகள் பஞ்சமில்லை. இதைப்பற்றி சுயமரியாதைத்தலைவருக்கு அதிகம் கூறவேண்டியதில்லை. அவர்களுக்கு இதில் நல்ல பழக்கமுண்டு; போதிய அனுபவமுண்டு. அடுத்தாற்போல் பணம் வேண்டுமாம்! அட பைத்தியமே! இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? ராஜாக்கள், ஜமீன்தார்கள்பணம் உங்கள் பாக்கெட்டில் இருக்கும்போது பணத்துக்கு என்ன கவலை? பணத்துக்குப் பஞ்சமே வேண்டாம்! எத்தனையோ ஜமீன்தார்களும், ராஜாக்களும் பணம் வைத்துக் கொண்டு உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சலாம் போட்டால் ஆயிரம் ஆயிரமாகக் கொட்டத் தயார்! ஆனால், தமிழர் தலையில் கை வைக்க எண்ணாதீர்கள். தமிழரே! நீங்களும் இந்த சு. ம. ஜஸ்டிஸ்காரரிடம் ஏமாந்து பணம் கொடுத்து விடவேண்டாம். நீங்கள் பணம் கொடுத்தால் அந்தப் பணம் உங்கள் தலைக்கே வரும். உங்கள் மண்டை உடைந்து, குறுக்கு முறிந்துவிடக்கூடிய நிலைமை ஏற்படலாம். தமிழர் பணத்தைக் கொடுத்துவிட்டுக் காலிகளின் கல்லெறிக்கும், காலித் தனத்துக்கும் தயாராக இருக்கவேண்டியதுதான்! தமிழர் வீடுகளும், கதவு ஜன்னல்களும் பத்திரமாக இருக்கவேண்டியதுதான். தமிழர் பணம் கொடுத்தால், அந்தப் பணம் தமிழர் இரத்தம் வெள்ளமாய் ஓட உதவியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை தமிழரே! பணம் கொடுத்து, உங்கள் சகோதரர் இரத்தத்தைப் பிரதிபலனாக வாங்கப்போகிறீர்கள்? வேண்டாம். காலிகளுக்கும், கூலிகளுக்கும் பணம் கொடுத்து மோசம் போகவேண்டாம். தமிழ் நாட்டைக் குட்டிச்சுவராக்க வேண்டாமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன் சு ம காரருக்கும், ஜஸ்டிஸ் கட்சியாருக்கும், ராஜா, ஜமீன்தார்கள் பணம் ஏராளமாக இருக்கிறது அதைக்கொண்டு அவர்கள் ஆனதைப் பார்த்துக்கொள்ளட்டும் தமிழர் மட்டும், பணத்தைக் கொடுத்து, ஏழைத் தமிழர் பாவத்தையும், பழியையும் ஏற்றுக் கொள்ளவேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* * *

சுயமரியாதைப் பத்திரிகைகள் புளுகுக்கு இன்னமொரு சிறு உதாரணம். ஈ. வெ. ராமசாமியார் பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது துறையூரில் காங்கிரஸ்காரர், ஈ வெ ரா. படத்துக்கு மாலைபோட்டு, மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்களாம்! அது மட்டுமா? காங்கிரஸ் மந்திரிகளையும் கண்டித்துப் பேசினார்களாம்! இது ஒரு சு ம பத்திரிகையில் வந்த செய்தி. ஆனால், அப்படிச் செய்த அந்தக் காங்கிரஸ்காரர் யார்? அவர்கள் பேரென்ன? இந்த உண்மையை அந்தப் பத்திரிகை வெளியிடுமா? இன்றேல், அது வெறும் மூட்டைதான்! சென்னைக் கடற்கரையில் நடந்த பெரிய காங்கிரஸ் கூட்டத்தைப்பற்றி எழுதியிருக்கும் பொய் மூட்டையோடு அந்த மூட்டையும் சேர்க்கவேண்டியதுதான். பெடரேஷனை எதிர்க்க சென்னைக் கடற்கரையில் ஒரு பிரமாண்டமான கூட்டம் கூடியது மாஜி காங்கிரஸ் தலைவர் எஸ். சீனிவாச அய்யங்கார் தலைமை வகித்தார் முதன் மந்திரி ராஜகோபாலாச்சாரியாரும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்து பெடரேஷனை எதிர்த்துப் பேசினார். கூட்டத்துக்குச் சுமார் 35, 40 ஆயிரம் ஜனங்கள் வந்திருந்தனர்; "ஹிந்து" பத்திரிகை சுமார் 25 ஆயிரம் ஜனங்களுக்கு மதிப்பிட்டிருக்கிறது மெட்ராஸ்மெயில் 10 ஆயிரமெனக் குறிப்பிட்டிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டுக்குப் 10 ஆயிரம் பேர் வந்ததாகக் கூறிய "மெயில்" நிருபருக்கு கடற்கரைக் கூட்டம் சிறிதாக தெரிந்தது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. அது "மெயில்" மனப்பான்மை. அதைப்பற்றி இங்கு ஒன்றும் அதிசமாகக் கூறவேண்டியதில்லை. ஆனால், சுயமரியாதைப் பத்திரிகை நிருபருக்கு அந்தப் பிரமாண்டமான கூட்டம், 1500, 2000 மாகத் தெரிந்ததுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அந்த நிருபர் குருடரா, அல்லது, கண்ணிருந்தும் கபோதியாவென்பது தெரியவில்லை. அது எப்படியோ போகட்டும்; சு. ம. பத்திரிகைகள், புளுகுவதில் பேர்போனவை. அப்பத்திரிகைகள், காங்கிரஸ் பத்திரிகைகளைப் புளுகுப் பத்திரிகைகளென்று கூறுவது, குயிலைப் பார்த்து காகை பழிப்பதுபோலிருக்கிறது. புளுகுகிற பத்திரிகைகள் எவை என்பதைத் தமிழ் மக்கள் இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

* * *

புளுகுவதில் சு. ம. காரர் எவ்வளவு நிபுணர்களோ, அவ்வளவுக்குக் குயுக்தி வாதம் செய்வதிலும் பலே ஆசாமிகள். அவர்கள் விவாதத்தில் மூளை இருக்காது என்றாலும், பாமர மக்களை ஏமாற்ற ஏதேனும் கூறுவார்கள்; பேசுவார்கள். எழுதுவார்கள். துரும்பைத் தூணாக்கி விஷமஞ் செய்வார்கள். பொய்யை மெய்யாகக் காட்ட செப்படி வித்தையெல்லாம் செய்வார்கள் ராஜபாளையத்தில் கூடிய தமிழ் மாகாண மகா நாட்டில், ஆச்சாரியார் சு. ம. காரருக்குச் சரியான "டோஸ்" கொடுத்தார்; ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கியதை மாற்ற முடியாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அவர் கூறியது முற்றிலுஞ் சரி. இன்று ஹிந்தி விஷயத்தில் விட்டுக் கொடுத்தால், நாளை இதே சு. ம களும், ஜஸ்டிஸ்காரரும் ஒவ்வொன்றிலும் விட்டுக் கொடுக்கும்படி கேட்பார்கள். மதுவிலக்கு வேண்டாமென்பார்கள். "மது வாழ்க! மதுவிலக்கு ஒழிக!" என்று கூறுவார்கள் என உதாரணம் எடுத்துக்காட்டினார். இந்த உதாரணத்தை ஒரு விஸ்வநாதம் குயுக்தி வியாக்யானஞ் செய்து எழுதியிருக்கிறார். அவர் வியாக்யானத்தில் அறிவோ, அறமோ இல்லை. ஆச்சாரியார் கூறியதின் உதாரணத்தை ஒரு குழந்தைகூட நன்றாக அறிந்து கொள்ளும். கல்வி வாசனையற்ற கீரை விற்கும் கிழவிகள்கூட அறிந்துகொள்ளுவார்கள். ஆனால், அறிவில் பெரிய, "பெரியாரின் சிஷ்யர்" விஸ்வநாதத்தின் அபார மூளைக்கு அந்த உதாரணத்தின் அர்த்தம் சரியாக எட்டவில்லை. கோணல் போக்கிலேயே போய் மரத்துப்போன அவர் மூளை, இதிலும் கோணலாகவே போயிருக்கிறது. ஆச்சாரியார், மதுவைத் தமிழுக்கும், மதுவிலக்கை ஹிந்திக்கும் ஒப்பிட்டு அவ்வாறு பேசியிருக்கிறாராம்! தமிழை ஒழிக்கவே ஹிந்தியைக் கொண்டுவந்திருக்கிறாரென விஸ்வநாதம் அனர்த்தஞ் செய்திருக்கிறார். இவருடைய குயுக்தி வாதத்தை காணும் எவரும் நகைக்காமலிருக்க முடியாது. இந்த குதர்க்கவாதஞ் செய்யும் ஒருவர் மூளையில் அசடு தட்டியிருக்க வேண்டுமென்றே எல்லோரும் நினைக்க வேண்டியிருக்கும்.

* * *

ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் இன்னொரு விசித்திரம் நடந்தது. ராமசாமியார் சிறையிலிருப்பதற்காக எல்லோரும் வருந்தினார்கள். அவரை விடுதலை செய்ய என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி யாரும் சிந்திக்கவே இல்லை. ஏராளமான பேர் மறியல் செய்து சிறைகளை நிறைக்கவேண்டும்; சிறைச்சாலைகளை இடித்துக் கட்டவேண்டும் என்று பன்னீர் செல்வம் ஜம்ப பேசினார். ஆனால், அவருக்குப்பின் பேசிய ஒருவர், சரியான வெடிகுண்டு போட்டார் செட்டி நாட்டு குமாரராஜா, பன்னீர் செல்வம், பாத்ரோ, பி. டி. ராஜன் முதலியோர் அந்த வெடிகுண்டு ஓசை கேட்டு அசந்து போயிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஈ. வெ. ரா. வை சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமேயானால், பன்னீர் செல்வம், குமாரராஜா, பி. டி. ராஜன் எல்லோரும் சிறை செல்ல முன்வர வேண்டுமென்று அவர் கூறினார். பலே! அதுதான் சரியான போடு! சிறை செல்ல பன்னீர் செல்வம், குமாரராஜா, பி. டி. ராஜன், பொப்லி, பாத்ரோ முதலியோர் தயாரா? அவர்கள் சிறைசெல்ல முன்வரட்டும் பார்ப்போம். அவர்கள் சிறை சென்றால், தமிழர் அனைவருமே அவர்களைப் பின்பற்றவும், சிறை செல்லவும் தயாராக இருப்பார்களென்பது திண்ணம். ஆனால், ஜஸ்டிஸ் கட்சி ராஜாக்களும் தலைவர்களும் சிறை செல்லத் தயாராக இருக்கிறார்களாவென்று கேட்டேன்?

ஏகாதிபத்தியத்துக்கு எமன்!

சர்வாதிகாரிகளுக்குச் சாவுமணி!! கேடுகாலம் - - ஆரம்பம்

ஹிட்லர், ஒரு பெரிய ஜெர்மன் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த நினைக்கிறார். அவர் எழுதிய "மெய்ன் கெம்ப்" என்னும் புஸ்தகம், அவர் காணும் கனவைத் தெளிவாகக் காட்டுகிறது. ரைன்லந்து, ஆஸ்திரியா ஜெக்கோ முதலிய தேசங்களைக் கைப்பற்றிவிட்டார். அந்தத் தேசங்களெல்லாம் ஹிட்லருடன் சேர்ந்துகொண்டு, ஜெர்மன் காலனிகளைக் கொடுக்கும்படி கூச்சலிடுகின்றன. ஜெர்மனியை எதிர்த்த ஜெக்கோகூட இப்பொழுது ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு, ஜெர்மன் காலனிகளைத் திரும்பக் கொடுக்கும்படி வற்புறுத்தி வருகிறது. மத்திய ஐரோப்பா அநேகமாக ஹிட்லரின் செல்வாக்கில் இருக்கிறதென்று சொல்லலாம்.

பிரிட்டனுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப் பிரிட்டிஷார் உணரவில்லை. 1939ம் வருடம் பிரிட்டனுக்கும் பெரும் சங்கடங்கள் ஏற்படுமென அரசியல் ஜோசியர் கூறுகிறார்கள். எந்த நிமிஷத்திலும் அதின் சாம்ராஜ்யத்துக்கு ஆபத்து ஏற்படலாம். ஆனால், பிரிட்டனோ, பழைய திமிர் கொண்டு கண் மூடித்தனமாக இருக்கிறது.

காலசக்கரம் வேகமாகச் சுழன்றுகொண்டு போகிறது. இதைத் தடுக்கவோ, ஜெயிக்கவோ யாராலும் முடியாது. சர்வாதிகாரிகள் பெரிய சாம்ராஜ்யங்களை ஏற்படுத்தக் கனவு காண்கின்றனர். ஆனால், அவர்கள் கனவெல்லாம் வெறும் கனவாக வந்து முடிவது நிச்சயம். சாம்ராஜ்யத்துக்கு எமன்கள் தோன்றிவிட்டார்கள். சர்வாதிகாரிகளுக்குச் சாவுமணி அடிக்கவும் பலர் முன்வந்துவிட்டனர். இந்த நிலைமையில் உலகம் எப்படி மாறுகிறதோ சொல்ல முடியாது. அதற்கு 1939ம் வருடம் அஸ்திவாரம் போட்டுவிட்டதாகப் பல அரசியல் ஜோசியர் கூறுகின்றனர்.

முசோலினிக்கும் ஆபத்து ஏற்படலாம். அந்த ஆபத்தை உணராமல் அவர் ஒரு பெரிய ரோமர் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த நினைக்கிறார்.

யுக்ரேய்ன் மீது கண்

ஒரு ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட எண்ணியிருக்கும் ஹிட்லருக்கு, "சிறு ரஷியா"வாகக் கருதப்படும் யுக்ரேய்ன்மீது கண்ணோட்டம் பாய்ந்திருக்கிறது. இதற்குக் காரணமென்ன? ஜெர்மனிக்கு மூலப் பொருள்கள் தற்போது அதிகம் தேவை. ஜெர்மனிக்கு வேண்டிய மூலப் பொருள்களைச் சப்ளை செய்யக்கூடிய தேசம் வேறு எதுவும் தற்போதில்லை. யுக்ரெய்ன்தான் அதற்குச் சரியான தேசம். யுக்ரெய்ன் செழிப்பான நாடு. ரஷியாவில் 5ல் ஒரு பங்குப் பேர்களைப் போஷிப்பது யுக்ரெய்ன் என்பதில் சந்தேகமில்லை. விவசாயத்தில் அதற்கு இணையான தேசம் கிடையாது. ரஷியாவுக்கு சப்ளையாகும் நிலக்கரியில் 100க்கு 80 வீதம் யுக்ரெய்ன் சப்ளை செய்கிறது. இரும்பில் 100க்கு 70 வீதம் யுக்ரெய்னிலிருந்தே எடுக்கிறார்கள். விவசாய இயந்திரங்கள்கூட 100க்கு 70 வீதம் யுக்ரெய்னிலிருந்து ரஷியாவுக்குப் போகின்றன. இவ்வளவு செழிப்பு வாய்ந்த யுக்ரெய்னைக் கைப்பற்ற ஹிட்லர் நினைப்பதில் ஆச்சரியமென்ன?

ஒரே பாய்ச்சல்!

மேலும், யுக்ரெய்ன்மீது பாய்வதற்கு ஹிட்லருக்குக் கஷ்டமுமல்ல; அது ரஷியாவின் அதிகாரத்திலிருக்கிறதென்று ஹிட்லர் பயப்படுகிறாரேயொழிய, யுக்ரெய்ன், ஜெக்கோ எல்லைக்கு அருகில்தானிருக்கிறது. ஜெக்கோ எல்லைக்கு அடுத்தாற்போல் ருமேனியா எல்லை சுமார் 150 மைல் தூரந்தான். அடுத்தாற்போல யுக்ரெய்ன். மத்திய ஐரோப்பாவிலேயே ஒரு ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட நினைக்கும் ஹிட்லருக்கு யுக்ரெய்ன் அவசியந்தான். ஆனால், ஹிட்லரால் அந்தவிதமான ஒரு சாம்ராஜ்யத்தை நிலைநாட்ட முடியுமா? அதுதான் சந்தேகம். ஏனெனில், ஹிட்லருக்கு விரோதமாக ஜெர்மனியில் பல சதிகள் ஆரம்பித்திருக்கின்றன. பல ராணுவ வீரர்கள் ஹிட்லருக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டார்கள். ஹிட்லரின் மலைக்கோட்டையாகிய பெர்ச்கோப்புக்குச் சென்று அங்கு ஹிட்லரை உயிரோடு தொலைக்கத் துணிந்தார்கள். ஆனால், அவர்கள் சதி எப்படியோ வெளியாகிவிட்டது. அவர் உயிரை வாங்கச் சதிசெய்த ஜெர்மன் ராணுவ வீரர்களையும், ஜெனரல்களையும் உயிரோடு சித்திரவதை செய்ய ஹிட்லர் உத்திரவுபோட்டுவிட்டார். பலர் ஹிட்லரின்கோபாக்கினைக்கு உள்ளானார்கள். பலர் தப்பியோடினர். என்றாலும், ஹிட்லர் அவர்களைவிடவில்லை. தப்பியோடி

ஹிட்லர் உயிருக்கு உலை வைக்க இப்பொழுதே பல சதிகள் நடந்து வருகின்றன. என்றாலும், அதிகார வெறி கொண்ட ஹிட்லர் மத்திய ஐரோப்பாவில் ஒரு ஜெர்மன் சாம்ராஜ்யத்தை நிலைநாட்ட நினைக்கிறார். அவர் கனவு பூர்த்தியாவதற்குள் அவர் உயிருடனிருப்பாரா? சந்தேகந்தான்.

யவர்களின் குடும்பங்களைச் சங்காரஞ்செய்ய நினைக்கிறார் ஹிட்லர். இதுவரையில் செய்துவந்த அட்டூழியங்களும் பழிபாவ மூட்டைகளும் சொல்லுந்தரமானதல்ல. இந்தப் புதிய மூட்டையையும்

(அடுத்த பக்கம் பார்க்க)

எமது மகத்தான 6-வது வாரம்

அநேகர் இடமின்றி திரும்புவதை அறிந்தும், நீங்கள் ஏன் இடத்திற்கு முந்தக்கூடாது.

மதுரை தேவி பால விநோத சங்கீத சபையாரால்

சென்னை ராயல் தியேட்டரில்

ஸ்ரீ. கிருஷ்ணலீலா -

என்னும் நாடகத்தை ருக்மணி கல்யாணம் வரையில் நடத்துவார்கள்

6-1-39 வெள்ளிக்கிழமை முதல் பிரதிதினமும்

செவ்வாய், வியாழன், சனி இரவு 9-30 க்கும், மற்ற நாட்களில் மாலை 5-30 க்கும்

இத்துடன் மயில் டான்ஸ் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் புரொப்ரைட்டர்.

ஏகாதிபத்தியத்துக்கு எமன்!

(முன்பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் சேர்க்க வேண்டியது தான். சர்வாதிகாரிகள் பழி பாவங்களுக்கு அஞ்சமாட்டார்கள இரத்த வெள்ளத்திலும், எதிரிகளின் எலும்புக் கூடுகள்மீதுமே அவர்கள் சர்வாதிகாரம் நாட்டப்பட்டிருக்கிறது. 1939ம் வருட ஆரம்பத்தில் ஹிட்லர் ஜெர்மனிக்கு இந்த சன்மானம் அளித்திருக்கிறார். அவர் உயிருக்கு அங்கு சாவுமணி அடித்தாய்விட்டது. இதே ஆபத்தில்தான் முஸோலினியும் இருக்கிறார். அவர் சுகமாக நித்திரை செய்வதில்லை. அவர் உயிருக்குப் ஆபத்து எந்த நிமிஷத்தில் ஏற்



இன்று பிரிட்டிஷ் முதன் மந்திரியாயிருக்கும் சேம்பர்லேன். மூனிச் துரோகத்திலல் பிரிட்டனுக்குப் பெரிய அவமானத்தைத் தேடிக் கொண்டார். அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின் இவர் மீண்டும் முதன் மந்திரியாக வருவது சந்தேகந்தான். பிரிட்டனில் இவர் மீது வெறுப்பு அதிகரித்து வருகிறது.

படுமோ சொல்லமுடியாது. சர்வாதிகாரிகளைத் தொலைக்கவேண்டுமென்ற எண்ணம், ஜெர்மனியிலும், இதாலியிலும் அதிகரித்து வருகிறது. ஒரு வேளை இந்த வருடம், அல்லது, அதற்கடுத்த 1940ம் வருடத்தில் சர்வாதிகாரிகளின் தலைகள் உருண்டு விடலாம். அத்துடன் அவர்கள் சர்வாதிகார ஆட்சிக்குச் சாவுமணி அடிக்கவேண்டிய காலம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

பிரிட்டன் தப்பிவிடாது

இந்த அமளியிலிருந்து பிரிட்டன் தப்பிவிடாதென்றே அரசியல் ஜோசியர் கூறுகிறார்கள். சர்வாதிகாரிகளை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்து முதன் முதலில் பிரிட்டனுக்குத்தான் வந்து சேருமென்பது அவர்கள் கருத்து. 1939-ம் வருடத்தில், பிரிட்டிஷ் மந்திரி சபையில் பெரிய நெருக்கடி ஏற்படுமெனத் தெரிகிறது. அந்த நெருக்கடியிலிருந்து சேம்பர்லேன் தப்புவது அபூர்வந்தான். அவர் உயிருக்கு ஆபத்தில்லை. ஆனல், அவர் மீண்டும் முதன் மந்திரியாக வருவாரா என்பதுதான் சந்தேகம். அவர் மட்டுமல்ல; சேம்பர்லேனுடன் வாலாட்டிக் கொண்டிருக்கும் பல மந்திரிகளும், கட்சித் தலைவர்களும் அடுத்த பொதுத் தேர்தலோடு மறைந்து போவார்களென்பது நிச்சயம். சீக்கிரத்தில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலோடு, எதிர்பாராத சம்பவங்கள் பல நடக்கும். சேம்பர்லேன் முதன் மந்திரியாக வரமுடியாது; அவருக்குச் சந்தர்ப்பமுமில்லை மூனிச் துரோகத்தோடு அவர் ஹிட்லருக்குச் சரணாகதியடைந்து பிரிட்டிஷாரின் மானத்தைப் போக்கிய சேம்பர்லேனுக்குப் பிரிட்டனில் அதிக எதிர்ப்பு இருந்துவருகிறது. சேம்பர்லேன் மட்டுமல்ல; ஹோர் போன்ற பிற்போக்கான மந்திரிகள் கூட மீண்டும் அதிகாரத்துக்கு வருவது சந்தேகந்தான்.

ஏகாதிபத்தியங்கள்

அநேகமாக சகல ஏகாதிபத்தியங்களுக்கும் இந்த 1939ம் வருடம் ஒரு எமனாக இருக்கும். விசேஷமாகப் பிரிட்டிஷ் சாம்ராஜ்பத்துக்கு இன்னம் அதிகச் சங்கடமேற்படும் அதற்குக் கேடுகாலம் இந்த வருடத்திலேயே ஆரம்பித்துவிட்டது. இந்தப் பொதுத் தேர்தலோடு, இங்கிலாந்திலேயே பெரிய மாறுதல்கள் ஏற்படலாம். தற்போதிருக்கும் பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளில் நிலைபெற்ற தொழிற் கட்சி ஒன்று. பொதுத் தேர்தலுக்குப்பின் ஒரு உறுதியான தொழிற் கட்சி ஏற்படலாம். அந்தத் தொழிற் கட்சியை மடக்க இங்கிலாந்தில பாஸிஸ்ட் கொள்கை அநுசரிக்கக் கூடுமெனச் சிலர் கூறுகிறார்கள் பாஸிஸ்ட் கொள்கை அநுசரிக்கப்படுமேயானல், பிரிட்டனில் அதிகக் கலவரம் ஏற்பட்டே தீரும். அதுவே அதின் சாம்ராஜ்பத்துக்கு எமனாக வந்து முடியலாம். பாலஸ்தீனம், இந்தியா முதலிய தேசங்களில் போராட்டம் இன்னமும் மும்முரமாக நடந்தே தீரும்.

அடுத்த யுத்தம்

சீன-ஜப்பான் யுத்தம் இன்னமும் நீடித்து நடக்கும். ஸ்பெய்ன் யுத்தமும் இப்போதைக்குள் முடிவடையாது. அங்கு இரத்த பெருக்கெடுத்து ஓடுமென்பது பலர் அபிப்ராயம். பாலஸ்தீனத்தில்தான் பிரிட்டனுக்குப் பெரும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது. இது போக, அடுத்த யுத்தம் இந்த வருடத்தில் வராது. ஆனல், ஐரோப்பாவைச் சூழ்ந்திருக்கும் யுத்த மேகம் ஒழியாது. அந்த யுத்த கோஷம் இந்த வருடத்தில் இன்னமும் மும்முரமாகவிருக்கும். ஐரோப்பாவின் பல பாகங்களில் யுத்தத்துக்கான அறிகுறிகள் அதிகமாகத் தோன்றலாம் என்ருலும், யுத்தம் வராது. ஆனல், இவ்வருடத்தில் ஐரோப்பாவெங்கும், திடீரென ஒரு பெரிய மாறுதல் ஏற்படுவது திண்ணம்.

சினிமா படங்கள்!

4¼"x3¼" சினிமா தனிப்படங்கள் டஜன் 1க்கு ரூ 1-0-0
" தேசிய தலைவர்கள் படம் டஜன் 1-க்கு ரூ 1-0-0
" லீலா விநோதப் படங்கள் டஜன் 1-க்கு ரூ 1-0-0

வி. பி. கிடையாது.
முன்பணம் அனுப்பவேண்டும்.
எம். ஜீ. ராஜன் ஃ Co,
P. B. No 231 G. P. O. MADRAS.

TRADE MARK Registered.
இழுப்பு இருமலுக்கு ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஔஷதம்
எங்கும் கிடைக்கும்
ஜீ. ஏன். ஸ்டிவர்ஸ் கம்பெனி,
41, எர்ரபாலு செட்டி வீதி, மதராஸ்

75 வருஷங்களாக இந்த A மார்க்
பெருங்காயம்

ஒன்றே மிகவும் உயர்ந்தது என எங்கும் புகழுடன் லட்சக்கணக்கான இந்திய குடும்பங்கள் தினர் உபயோகிப்பது. போலி மட்டக் காயங்கள் பஜாரில் மலிந்து கிடப்பதை வாங்கி ஏமாருமல் A மார்க் பெருங்காயம்தான் வேண்டும் என்று எப்பொழுதும் கண்டிப்பாய்க் கேளுங்கள்.

A மார்க்கை வாங்கினல் ஏமாற்ற முடியாது

1 பவுண்டு ½ பவுண்டு ¼ பவுண்டு. பாக்கிங்குகளிலும் 1 சேர் அழகான டின்களிலும் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

வல்லபதாஸ் தேஜ்பால்
கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

மனைத்திலும் குணத்திலும் சிறந்தவை
நீபா
(வேப்பம், நீம், மார்கோசா)
சோப்
GANGA WORKS. ADYAR. MADRAS
செ. 1-64, தங்கசாலை தெரு, பி. டி. மதராஸ் (ஏஜண்டுகள் தேவை)

T. Kuppuswamy Naidu
OPTICIAN

121 & 121. Moor Market: Madras.
PLEASE PAY US A VISIT.

உங்களுக்குத் தெரியுமா?

8 ஆயிரம் கோடி பவுன் பாழ்!

சென்ற மகா யுத்தத்தைப்போல் கொடுமையான யுத்தம் உலகில் இதுவரையில் ஏற்பட்டதில்லையென்று சொல்லலாம். அந்த யுத்தத்தில் மடிந்த பல லக்ஷக்கணக்கான மக்களை விட்டுவிடுவோம். பணம் மட்டும் எவ்வளவு பாழாயிற்று தெரியுமா? சுமார் 8 ஆயிரம் கோடி பவுன் பாழாயிற்றெனக் கணக்கெடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகையைக்கொண்டு, ஒவ்வொரு வீடும் 500 பவுன் வீதம் கட்டி, அந்த வீடுகளுக்கு வீடு ஒன்றுக்கு 200 பவுன் தட்டுமுட்டுச் சாமான்களுடன், பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, கானடா, பெல்ஜியம், ஜெர்மனி, ருஷியா முதலிய தேசங்களிலுள்ளவர்கள் எல்லோருக்கும் கொடுக்கலாமாம். இது தவிர, சுமார் 2000 பேரும், அதற்கு மேலும் வசிக்கும் உலகமெங்குமுள்ள ஒவ்வொரு நகரங்களிலும் சுமார் 30 லக்ஷம் பவுன் செலவில் டல புஸ்தக சாலைகளும், கலாசாலைகளும் கட்டி, அவற்றில் உலகமக்கள் அனைவரும் இலவசமாக வாசித்துப் பயன் பெறும்படி செய்ய முடியும். சுமார் 8 லக்ஷம் உபாத்திமார்களுக்கும், நர்சுகளுக்கும் மாதமொன்றுக்கு 200 பவுன் சம்பளம்கொடுத்து, அவர்களைக் கொண்டு உலக மக்கள் பயன்பெறுமாறு எவ்வளவோ வேலை செய்திருக்கலாம். ஆனால், பாழும் யுத்தம் இத்தனை கோடிப் பவுன்களை விழுங்கியதோடு, ஐரோப்பாவையே பாழாக்கிவிட்டது. இது தான் யுத்தம்! இந்தக் கொடுமையான யுத்தங்களை ஆரம்பிக்கவே, ஐரோப்பிய ராஜ தந்திரிகள் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பேசும் கெடிகாரம்!

ஒஹியோவில், அக்ரோன் என்னுமிடத்தில் சுமார் 70 வயதுள்ள மார்டின் ஷிபார் என்பவர் வசித்து வருகிறார். இவர் முடம்; என்றாலும் இவர் சும்மா இருப்பது கிடையாது. உலகிலேயே மகா அபூர்வமான கெடியாரம் ஒன்றைச் செய்து முடித்திருக்கிறார். அந்தக் கெடியாரம் மணி அடிக்கும்போதெல்லாம் அருமையாகப் பாடி, இத்தனை மணியென்று கூறுகிறது. அதன்பின்னும் பாடி முடிக்கிறது. இந்தக் கெடியாரத்தைச் செய்து முடிக்க 10 வருடங்கள் பிடித்தன. சுமார் 5000 சிறு துண்டு பலகைகளையும், பல மைல்கள் நீளமுள்ள மின்சாரக் கம்பியையும் உபயோகித்திருக்கிறார். இந்தக் கெடியாரத்தின் விலை சுமார் 10,000 பவுன் என மதிப்பிடுகிறார்கள். இந்தக் கெடியாரத்தில் மற்றொரு விசேஷம் யாதெனில், ஒஹியோ நேரத்தைமட்டுமல்ல, உலகிலுள்ள சுமார் 21 முக்கியமான பெரிய பட்டணங்களில் அந்நேரத்தில் நேரம் என்ன என்பதையும் கூறுகிறது.

எத்தனை பாட்டி?

அமெரிக்காவில், இந்தியானா என்னுமிடத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் பெயர் காரி பியான்ஸா. இக் குழந்தையின் தாய்க்கு 19 வயது. முதல் பாட்டி இன்னமும் உயிருடனிருக்கிறாள். அவளுக்கு வயது 40. இரண்டாவது பாட்டியும் உயிருடன் இருக்கிறாள். அவளுக்கு வயது 59. மூன்றாவது பாட்டியும் சாகவில்லை. அவளுக்கு வயது 74. நான்காவது பாட்டிகூட தள்ளாத கிழவியாக இருக்கிறாள். அவளுக்கு வயது 99. நான்கு பாட்டிகளுடைய குழந்தை அமெரிக்காவில் வேறு கிடையாது. அதிர்ஷ்டசாலியான குழந்தைதான்.

தேனீக்களுக்கு ஆபத்து!

தீராத வாத நோய்க்கு தேனீக்களின் விஷம் நல்லது. வாத நோய் பிடித்தவர்களைத் தேனீக்கள் அடிக்கடி கொட்டினால் வாத ரோகம் தீர்ந்து போகும். ஐரோப்பாவில் தேனீக்கள் பார்ப்பவர்களுக்கு இது ஒரு பிழைப்பாக இருந்துகொண்டிருக்கிறது. வாதரோகியை ஒரு தேனீ கொட்ட விடுவதற்கு ஒரு பென்ஸ் சார்ஜ் செய்கிறார்களாம்! ஜெர்மனியில் தேனீக்களைக்கொண்டு கொட்ட விடுவதை சிலர் வழக்கமாகக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜெர்மன் சர்க்காரே தினசரி சுமார் 1 லக்ஷம் தேனீக்களிடமிருந்து விஷம் எடுப்பதற்குப் பல ஆயிரக் கணக்கான பெண்களை வேலையில் அமர்த்தியிருக்கிறார்கள். அந்த விஷத்தை வாதரோகிகளுக்கு இன்ஜெக்ஷன் செய்து குணப்படுத்தி வருகிறார்கள். இயற்கையாகத் தேனீ கொட்டுவதால், எவ்வளவு குணம் ஏற்படுமோ, அவ்வளவுக்கு இன்ஜெக்ஷன் முறையில் குணம் ஏற்படுவதில்லையாம்.

யானை வீரன்!

உகண்டா என்னுமிடத்தில் ஒரு பெரிய வீரன் தோன்றியிருக்கிறான். இவனை பிரிட்டிஷ் சர்க்காரே புகழ்ந்திருந்தது. சில மாதங்களுக்கு முன் உகண்டா பிரதேசத்தைச் சார்ந்த சுவா என்னுமிடத்திலுள்ள காடுகளில் திடீரெனத் தீ பிடித்துக்கொண்டது. அந்தத் தீயில் ஒரு பெரிய யானை அகப்பட்டுக்கொண்டது. தீயிலிருந்து தப்பித்துக்கொள்ள அது வெறி பிடித்தது போல் பாய்ந்து வந்தது. உயிர் தப்பித்துக்கொண்டது. அந்த வெறியில் அது சுவா நகருக்குள் பிரவேசித்துப் பெரும் அட்டகாசம் செய்தது. ஓமாரா என்னும் இளைஞன் இதைக் கண்டான்; இவன் ஒரு சுதேசி. அவனுடைய பெரிய ஈட்டியுடன் யானையை எதிர்த்தான். ஈட்டியால் அந்த யானையைக் குத்திக் கொன்றான். அதன்பின் மற்றொரு பெரிய ஆண் யானை மதங்கொண்டு காடுகளில் திரிந்து வந்தது. அதை ஒரு ஐரோப்பிய வேட்டைக்காரர் சுட்டுக் காயப் படுத்தினார்; யானை சாகவில்லை. அது அந்த வெள்ளையரைப் பழி வாங்கக் காடுகளில் பதுங்கித்திரிந்தது. வேட்டையாடச் சென்ற வெள்ளையர் யானையிடம் அகப்பட்டுக்கொண்டார். அவரைப் பழி வாங்க யானை அவரைப்பிடித்து, ஆகாயத்தில் தூக்கி எறிந்தது. இந்நேரத்தில் ஓமாரா அங்கு வந்தான். யானையை வெருட்டி அடித்தான். ஈட்டியால் யானையைக் கொன்று வெள்ளையரைத் தூக்கிக்கொண்டு சுமார் 5 மைல் தூரம் நடந்துசென்று ஊர் போய்ச் சேர்ந்தனர். வெள்ளையருக்கு காயம் அதிகமேயாயினும் அவர் உயிருடனிருக்கிறார்.

க்ஷவரத்திற்கு பின்னும் முகப்பரு வரவொட்டாமல் தடுக்கவும், யௌவனத்திற்கும் பிரசித்திபெற்ற பாப்பி கிரீம். ஆண், பெண் இரு பாலரும் உபயோகிக்கக்கூடியது. பிரான்ஸ் அழகு போட்டியில் பரிசுப்பெற்றது. விலை அ. 6. ஏஜண்டுகள் தேவை கேட்லாக் இனம். $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பில் அனுப்பப்படும். விவரங்களுக்கு:-"பாப்பி பேர்பியுமரீஸ்,"
16 பைராகி ஜங் தெருவு, மவுண்ட் ரோட், மதராஸ்.

களைப்பா?

இழந்த உங்கள் பலத்தை
இந்த மூன்று டானிக்குகளும்
திரும்பக் கொண்டுவரும்

மூன்று
டானிக்குகளும்
ஒன்றில்
அடங்கியிருக்கின்றன.

இரத்தத்தை அதிகரிப்பது!
உற்சாகமூட்டுவது!
தேகத்தைப் பலப்படுத்துவது!

புட்டி ஒன்று ரூ. 2.

SPENCER & CO.,
Limited.,
Manufacturing Chemists.
MADRAS.



போலந்து தேசத்தில் ஒரு காட்டுப் பிரதேசத்தைச் சமீபத்தில் தோண்டிப் பார்த்தார்கள். பூமிக்குக் கீழ் பல ஆயிரக் கணக்கான சிறு மர வீடுகளிருந்தன. அந்த வீடுகள் எல்லாம் சுமார் 4,000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டிருக்கலாமென ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். அந்த மர வீடுகளெல்லாம் இதுவரையில் அழிந்துபோகாமல் நல்ல நிலைமையிலிருக்கின்றன.

* * *

சர். ஜியார்ஜ் தாமஸ் என்பவர் சதுரங்க விளையாட்டில் நிபுணர். அவருடன் போட்டி போட முன் வந்தவன் 23 வயதுடைய ஜெக்கோ இளைஞன் ஒருவன். இருவருக்கும் சதுரங்கப் போட்டி விளையாட்டு ஆரம்பமானது. ஒரு சதுரங்க கட்டையைத் தள்ளுவதற்கு அந்த வாலிபன் 70 நிமிஷ நேரம் யோசித்தானும்! சதுரங்க விளையாட்டு முடிவதற்கு ஒரு வாரம் பிடித்தது.

* * *

அமெரிக்காவில் கலிவான் என்னும் பிரதேசத்திலுள்ள ஷெரீப் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார் இரவு முழுவதும் விருந்து நடந்தது. ஷெரீப் நன்றாகக் குடித்தார் வீட்டுக்கு அவருடைய மோட்டாரில் திரும்பிச் சென்றார் குடிவெறியால் ரோடு தெரியாமல் காரை ஓட்டி வேறொரு காருடன் மோதிக் கொண்டார். மறுநாள் ஷெரீப் கோர்ட்டில் வழக்கு வந்தது ஷெரீப் அவர்மீதே வழக்குத் தொடர்ந்து, குடிவெறியால் காரை ஓட்டிச் சென்றதற்காக அவருக்கு 20 பவுன் அபராதம் விதித்துக் கொண்டார். நியாமான ஷெரீப் தான்!

* * *

உலகில் முதன் முதல், எங்கு சாராயம் உற்பத்தி செய்தார்களென்பதைப் பற்றிச் சிலர் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். பூமியைத் தோண்டி அதற்கு ஆதாரங்களுந் தேடினர். மெஸோ பொட்டோமியாவில்தான் 6000 வருடங்களுக்கு முன் சாராயம் வடிகட்டி வந்தார்களென்பதைச் சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

* * *

நெப்ரெங்கா என்னுமிடத்தில் தங்கநகை வர்த்தகஞ் செய்துவரும் எம்மானுவல் காம் என்பவர் ஒரு சிறு மின்சார மோட்டார் ஒன்று செய்திருக்கிறார். அதின் அளவு ஒரு மனிதனின் பெருவிரல் நகத்தின் அளவுதானிருக்கும் மோட்டாருக்குரிய 58 பாகங்களையும் தங்கத்தால் செய்திருக்கிறார். அதின் நிறை ¼ அவுன்ஸ் இருக்கும் இந்த மோட்டாரை 3 வால்ட் பாட்டரிமூலம் அவர் ஓட்டிக் காட்டினர்.

* * *

அரிஜோனு பிரதேசத்தில் வசிக்கும் நவாஜோனு தேதேசிப் பெண்கள், அவர்களுடைய கணவர்களை வேண்டாமென விவாக ரத்துச் செய்ய விரும்பினல் ஒரு காரியஞ் செய்கிறார்கள். அந்தக் கணவர்கள சவாரி போகும் குதிரைகளின் சேணங்களை எடுத்து வீட்டுக்கு வெளியில் வைத்துவிட்டு, வீட்டிலிருந்து வெளியேறி விடுகிறார்கள் அதன்பின் கணவனுக்கு மனைவி மட்டில் எவ்வித உரிமையும் கிடையாது. மனைவிகூட தகராறுக்குக் கூடப் போவதில்லை.

* * *

ஹாலிவுட் சினிமாவில் நடிக்கும் ஜிக்ஸ் என்னும் மனிதக் குரங்குக்கு வாரமொன்றுக்கு 130 பவுன் சம்பளம். சாப்பாட்டு வகைக்காக மாதமொன்றுக்கு 70 பவுன். அந்தக் குரங்கைப் பாதுகாக்கும் இருவருக்கு வாரமொன்றுக்கு 60 பவுன் சம்பளம் உயர்ந்தசம்பளம் வாங்கும் சினிமா குரங்கு இது ஒன்றுதான்

* * *

ஜெர்மன் கோர்ட்டில் ஒரு விசித்திரமான வழக்கு நடந்தது. அந்த வழக்கில் ஒரு டச்சுக்காரன் சாட்சி சொல்லவேண்டியதாயிற்று ஆனல் டச்சுக்காரர் ஜெர்மன் கோர்ட்டுக்குச் சென்று சாட்சி கூற மறுத்துவிட்டார் ஆகவே, ஜெர்மன் மாஜிஸ்திரேட் அவருடைய கோர்ட் நடவடிக்கைகளை, மாற்றவேண்டியதாயிற்று. ஜெர்மன், ஹாலந்து எல்லைப் புறத்தில் ஒரு மேஜை போட ஏற்பாடு செய்தார் அந்த மேஜை பாதி ஹாலந்திலும், பாதி ஜெர்மனியிலுமிருந்தது. ஜெர்மன் மாஜிஸ்திரேட் ஜெர்மன் எல்லைப்புறத்தில இருந்துகொண்டார். டச்சு சாட்சிக்காரர் ஹாலந்து எல்லைப்புறத்திலிருந்துகொண்டு சாட்சி கூறினர். டச்சுக்காரர் தேசபக்திக்கு இது ஒரு உதாரணம்!

கர்ப்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரிகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். ருதுக க்ஷயம், ருதுக சூலை, ருதுக ஜுரம், ருதுக வாய்வு, ருதுக கட்டு, ருதுகச் சிக்கல், ருதுகத் திரஷி, ருதுகக் கட்டினுல் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள், உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல் எழுந்திருக்க முடியாமை, இளைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலம்கூட தூக்க முடியாத பலவீனம், ருதுக ஜன்னி முதலிய வியாதிகளை யெல்லாம் தீர்த்து கர்ப்பப்பை சுத்திகரிப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6 வித மலடுதீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கூட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

பெருக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.

1 புட்டி ரூ. 2. 3 புட்டி 5-ரூ. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்

சித்த வைத்தியசாலை பழனி. S. I.

பிராஞ்சு:—16, திருவல்லிகேணி ஹைரோடு, சென்னை.

வற்றா பொக்கிஷம்

தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்ட இலட்சக்கணக்கான ஜனங்களை எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

காப்பாற்றி வந்திருக்கின்றன. சென்ற 57 வருஷங்களாக நாங்கள் கேட்காமலே வந்து குவிகின்ற நற்சாக்ஷிப் பத்திரங்களே மேற்படி மாத்திரைகள் குணங்கொடுப்பதில் குன்றாத பொக்கிஷமென்பதை நிரூபிக்கின்றன.

நீங்களும் உபயோகித்து குணத்தையடையுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0

இனும்! போஜன விதிகள் இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 26 பிராட்வே, மதராஸ்.

பெருங்காயத்தில் சிறந்தது

N. K. S.

பெருங்காயம் தான் ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

காரன்தாஸ் கேசூர்தாஸ் அன் சன்ஸ்

பெருங்காய வியாபாரிகள்

-204, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு ஜீ. டி. மதராஸ்

தலைமை ஆபீஸ்: "வடகாதி" பாம்பே 3

கிளை ஆபீஸ்:— கும்பகோணம்.

மாதங்கள் வேண்டாம் நாட்களும் வேண்டாம்.

ஒரே ஒரு மணி நேரத்தில் வீரிய ஸ்தம்பனம் ஏற்பட

ரமண விலாசினி வடிகா உபயோகியுங்கள்.

ஒரு டப்பி விலை ரூபா 1—0—0

மதனமஞ்சரி பார்மஸி, 1-94, சைனபஜார், மதராஸ்.

ஆனந்தம் * மனோ உற்சாகம்

உடையவர்களாயிருக்கவேண்டுமாகில் நீங்கள் எல். ஜி. பெருங்காயத்தையே வாங்கி உபயோகியுங்கள். லட்சக்கணக்கான மக்கள் அதன் அருமையை அறிந்து அதையே வாங்கி உபயோகிக்கிறார்கள்.

எல். ஜி.

பெருங்காயமானது

எல்லா பெருங்காயங்களிலும் தலை சிறந்தது
நீங்கள் பெருங்காயம் வாங்கும்போது
எல். ஜி. மார்க் போட்டிருக்கிறதாவென்பதைக்
கவனித்து வாங்குங்கள்
போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

லால்ஜி கோது அன் கோ,

சௌகார் பேட்டை, மதராஸ்.

ஜண்டு

கேசரி ஜீவன்

தாதுவிருத்தியைக்
கொடுக்கும்
சிரேஷ்டமான டானிக்
ஜண்டு, அலோபதிக் ஆயுர்வேதிக்
மருந்துகள்
கீழ்க்கண்ட எமது தமிழ் நாடு
சப் ஏஜண்டுகளு - மி நசு
கிடைக்கும்.
தமிழ் நாட்டில் சப் ஏஜண்டுகள்

மதுரை:—டி என். சி. நாகலிங்கம் பிள்ளை, வடசித்திரை தெரு.
திருச்சி:—எஸ். வைத்யா அண்டு கம்பெனி, வ்ஞபாகர் மெடிகல்ஹால்
புதுக்கோட்டை:—அண்ணு கெமிஸ்ட்ஸ.
காரைக்குடி:—கணேசர் மெடிகல்ஹால்.
கும்பகோணம்:—டாக்டர் எஸ். கோவிந்தசாமி நாயுடு.
தஞ்சாவூர்:—பி. வி. முத்துகிருஷ்ண ராஜா.
கடலூர்:—ஸ்ரீராம பார்மஸி, புதுப்பாளையம்.

or. From Madras Presidency Agents

Damoder & Co, 78, China Bazaar Road, Madras.

பலவீனத்தைப் பறக்கடித்து,

உடல் நலத்தையும்
தாது விருத்தியையும் தருவது

சி. எம். சாமி

மன்மத குளிகை

என்பதை அறியுங்கள்

இது துர்ச்செய்கைகளின் பலனால் ஏற்பட்ட பலவீனம், போகசக்திக் குறைவு, இவைகளை நிவர்த்தித்து, தளர்ந்த நரம்பை முறுக்கேற்றி மன உற்சாகம், வீரிய விருத்தி முதலியவைகளைக் கொடுக்கும். 20 குளிகை விலை ரூ. 2-0-0.

கிடைக்குமிடம்:—

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

2 ஷ பிராஞ்சு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
3 இம்பீரியல் பின்மென் அண்டு ஸ்டோர்ஸ்,
107, தாம்ஸன் தெரு, ரங்கூன். (கிழக்கு)

சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ்

ஜீவிய சரித்திரம்

இந்திய நாட்டின் இளஞ் சிங்கம் சுபாஷ் சந்திர போஸின் ஜீவிய சரித்திரம். சுபாஷ் போஸின் வீர வாழ்க்கையையும், தியாக புத்தியையும், சீரிய குணத்தையும் இந் நூலில் விரிவாகக் காணலாம். ஒவ்வொரு தமிழனும் இதை வாசித்துப் பயன் பெறுவார்களாக.

புத்தகம் 1 க்கு விலை அணு 4.

5 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் புத்தகம் அனுப்பப்படும்.

மலாய் நாட்டிலுள்ளவர்களும், மற்ற அந்நிய நாட்டிலுள்ளவர்களும் 0—8—6 ஸ்டாம்பு அனுப்பிவைத்தால் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "தமிழ்மணி"



ஸ்தாபிதம், 1914   டெலிபோன் நெம்பர் 1224
புராதின இரும்புப்பெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும்,
நடராஜன் இன்ஜினீரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேச முதலியார்.

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள்,
அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள்
இதற்கு வேண்டிய தனிசாமான்கள் இதர மிஷனெரி
சாமானகளும் தயாரித்து சப்ளை செய்பவர்.
59. பிராட்வே   மதராஸ்.

இனும்!   மிகவும் ஆச்சரியம் !!   இனும் !!!

குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு
பணம் உடனே வாபீஸ்

"கமலாஸ் காந்தாமிருதம்"

நீங்கள் என்றுமழியாத இளமை பருவத்தை அடைய வேண்டுமானல்
எங்கள் கமலாஸ் காந்தாமிருதத்தை சாப்பிட்டு ஆனந்தமடையுங்கள்

வாலிபக்கிழவர்களைக் குமரனுக்கும் என்பதற்கு ஏதாவது சந்தேகமுண்டா? இது காதலருக்கு இன்பந்தரும் லேகியம் போகானந்தத்தை விரும்பும் புமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமிர்தம் மனிதரின் பாலிய சேஷ்டையாலும் ரத்தப்போக்காலும் நாடிகள் தளர்ந்து உட்கார்ரவும் எழுந்திரிக்கவும் சக்தியற்றவர்களுக்கு சுரு சுருப்பையும் ஆண்மையையும் வேண்டுமானல் இதை உபயோகிக்கவும். ஆண் பெண்கள் இதை காலை மாலை சாப்பிட்டுக் கொண்டுவர வெள்ளை, தீரேகமெல்லாம் சதா அனல் கை கால் ஒச்சல், நீர் எரிச்சல், ஆசனக் கடுப்பு. அதிக உஷ்ணம் தினம் நித்திரை இல்லாமை ரத்தக் கொதிப்பு மூளைக்கொதிப்பு உள்ளங்கை உள்ளங்கால எரிச்சல், சொட்டு மூத்திரம், அதிக நீர் போக்கு, நாசியில் இரத்தம் வருதல், எலும்புருக்கி, அஸ்தி வெட்டை, கைகால் ஒச்சல், க்ஷயக்கம், சோம்பல், கண் எரிச்சல், உஷ்ணத்தினுல் தலைமயிர் உதிருதல் சொரி கணச்சூடு, சிரங்கு, கொர்ப்பவெட்டை மலச்சிக்கல், உஷ்ணத்தினுல் உண்டான வியாதி எல்லாம் போய் திரேகத்தை தகதமயமாக்கும். இந்தியாவில் 100க்கு 75 பேர் உஷ்ண சரீரத்தை உடையவராக இருக்கிறார்கள். ஆகையால் இதை சாப்பிட்டு ஆனந்தமடையுங்கள்.

10-நாள் சாப்பிடக்கூடிய மருந்து ரூ. 1-12-0   20-நாள் சாப்பிடக்கூடிய மருந்து ரூ. 3-0-0   வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவும்.

எமது விலாசம்:— **A. S. வைத்தியசாலை,** 8-வது பீட்டு, வேப்பேரி போஸ்டு மதராஸ்.

இந்தியா
தனிப்பிரதி
விலை அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா
3—8—0

இலங்கையில்
தனிப்பிரதி சதம் 6
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா, மலாய்

தனிப்பிரதி 0-1-6
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப் பட மாட்டாது.

ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே,

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையின் மோகம்?—பாரதி

தயாராகிவிட்டது! * * தயாராகிவிட்டது!!

சொக்கநாதன்

: அல்லது :

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல்

வெளிவந்து விட்டது

காதல், சோகம், ஹாஸ்யம்,
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
முதல்தரமான துப்பறியும் கதை.

உடனே ஆர்டர் கொடுங்கள் விலை 12 அணா.

முன்பணமாக அனுப்பவும். -::- வி. பி. யில் அனுப்பிவைக்கப்படமாட்டாது.

இந்தியாவிற்கு தபால் செலவு உள்பட ரூ. 1-0-0

பர்மா, மலாய் முதலிய அந்நிய நாடுகளுக்கு தபால் செலவு உள்பட ரூ. 1-2-0

மானேஜர்:-

"தமிழ் மணி" ஜி. டி. மதராஸ்

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" PRESS, 21, Sembudoss St., G. T. MADRAS.